# நிகரன் 20




## உடுமலை சங்கர் சாதி ஆணவப் படுகொலை வழக்கின் தீர்ப்பும் மரண தண்டனை எதிர்ப்பும்

ஜனவரி, 2018
தனிச்சுற்று

# உள்ளே..

உழைப்பாளி மக்களின் ஆன்மீக ஆயுதம்
☐
மே 17 இயக்கம் என்ன சொல்கிறது?
☐
ஸ்டாலின் குறித்த வரலாற்று ரீதியான பார்வை
☐
அற்பவாதிகள் குறித்த சித்திரம்
☐
காலண்டரின் வரலாறு
☐
உடுமலை சங்கர் சாதி ஆணவக் கொலை வழக்கின் தீர்ப்பும் மரண தண்டனை எதிர்ப்பும்
☐
அடிப்படை மார்க்சியம்
☐
நமது நிலை
☐
மேற்கோள்கள், குறிப்புகள்

**இந்திய தேசியம்**
**மத தேசியம்!**
**திராவிட தேசியம்**
**மரபின தேசியம்!**
**தமிழ்த் தேசியம்**
**மொழி தேசியம்!**
**கொங்கு தேசியம்**
**சாதித் தேசியம்!**
**சர்வ தேசியம்**
**வர்க்க தேசியம்!**

# ஒளி வீசும் உலகம்

உண்மையாகப் பார்க்கும்போது, மனிதன் எப்போது இன்பமாய் இருக்கிறான்? தான் விரும்புவதை அடையும்போதுதான். உணர்ச்சி அனுபவத்தின் ஆற்றல், விருப்பத்தின் ஆற்றலைச் சார்ந்திருக்கிறது. ஒரு குறிக்கோளை அடைவதற்கு மனிதன் ஆர்வத்துடன் விரும்பினால், இந்த விருப்பம் அவனை அமைதியாக இருக்க விடாவிட்டால், இந்த ஆர்வம் காரணமாக அவன் அனேகமாக உறங்க முடியாமல் தவித்தால், அப்போது இந்த விருப்பத்தின் நிறைவேற்றத்தால் அவனுக்கு உண்டாகும் இன்பத்தில் உலகம் அனைத்துமே ஒளி வீசுவதாக அவனுக்குத் தோன்றுகிறது. அவன் காலடியில் நிலம் பாட்டு இசைக்கிறது.

குறிக்கோள் இன்னும் அடையப்படவில்லை என்றாலும் பரவாயில்லை. மனிதன் அதை ஆர்வத்துடன் விரும்புவதுதான், அதே கனவாக இருப்பதும் அந்தக் கனவால் முற்றாக ஆட்கொள்ளப் படுவதும்தான் முக்கியமானது. அப்போது மனிதன் தன் திறமைகளை முழுமையாகச் செயலில் காட்டுகிறான், எல்லாத் தடைகளுடனும் ஆவேசமாகப் போராடுகிறான். முன்னே வைக்கும் ஒவ்வோர் அடியும் இன்ப அலையில் அவனை முழுக்காட்டுகிறது. ஒவ்வொரு தோல்வியும் சாட்டையடி போலச் சுளீரென்று உறைக்கிறது. மனிதன் துன்பமும் மகிழ்ச்சியும் அடைகிறான், அழுகிறான், சிரிக்கிறான். மனிதன் வாழ்கிறான். இத்தகைய உளமார்ந்த விருப்பங்கள் இல்லாவிட்டால் வாழ்க்கையும் இல்லை. விருப்பங்கள் இல்லாத மனிதன் இரங்கத் தக்கவன். வாழ்க்கை ஊற்றுக்கள் அவனுக்கு அடைபட்டு விடுகின்றன. வாழ்க்கை நீரைப் பெற அவனுக்கு இடம் இருப்பதில்லை. மனிதன் பிறவியிலேயே அசடன் அல்ல என்றால், எவ்வித இன்பக் கேளிக்கைகளும் அவனுடைய வாழ்க்கையின் வெறுமையை நிறைக்க முடியாது.

■ **செர்கேய் செக்மரியோவ்**

# உழைப்பாளி மக்களின் ஆன்மீக ஆயுதம்

## ஷோலம் கெர்மான்

மார்க்சியம் தொழிலாளி வர்க்கத்தின் சித்தாந்தம். தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுடன் நேரடியாக, பகிரங்கமாக இடையுறவு கொண்டது.

வர்க்கங்களாகப் பிரிந்திருக்கும் ஒரு சமுதாயத்தில் எந்த ஒரு கண்ணோட்டமும் ஏதேனும் ஒரு வர்க்கத்தின் நலன்களை முதன்மைப் படுத்தாமல், சார்ந்திருக்காமல் இருக்க முடியாது.

வர்க்கப் பிரிவினைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயத்தில், அறிவாற்றலின் தனித்தன்மைகளும், எல்லைகளும், சாத்தியப்பாடுகளும் எப்போதும் மக்களின் நடைமுறை நடவடிக்கைகளால் தீர்மானிக்கப் படுகின்றன. அந்த சமுதாயத்தின் வாழ்க்கை, அதன் அடிப்படை, அதன் சிறப்பியல்புகள், வளர்ச்சி ஆகியவை அதன் வர்க்கங்களின் நலன்களைப் பாதிக்காமல் இருக்க முடியாது. தனி ஒரு மனிதர், நிறுவனங்கள் மற்றும் அரசு ஆகிய எல்லாவற்றின் நடைமுறை நடவடிக்கைகளும் வர்க்கச் சார்பு கொண்டதாக இருப்பது தவிர்க்க முடியாதது. எனவே, தனி ஒரு மனிதர், நிறுவனம், அரசு குறித்த அறிவு தவிர்க்க முடியாதபடி வர்க்க நலன்களைப் பிரதிபலிப்பதாகவே இருக்கும்.



ஒவ்வொரு குறிப்பான சமுதாயமும் பல்வேறு சிக்கலான, முரண்பாடான இயக்க நிகழ்வுகளுடன் முன்னேறிச் செல்கிறது. தனக்கே உரித்தான எதார்த்தமான வளர்ச்சி விதிகளுக்கு ஏற்ப அது வளர்ச்சி அடைகிறது. எவரொருவர் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், இந்த வளர்ச்சியை எதிர்க்கும் அல்லது இந்த வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் எல்லா சக்திகளையும் காலப் போக்கில் அது வெற்றி கொள்கிறது. எனவே, எந்தத் தனியொரு வர்க்கத்தின் நலனும் சமூக வளர்ச்சி விதிகளுக்கு முரண்பட்டதாக இருந்தால், அதனுடைய சித்தாந்தம் அறிவியலுக்கு ஏற்புடையதல்ல. அது அறிவியல் அடிப்படை அற்றதாகி விடுகிறது.

சமுதாயத்தின் வளர்ச்சி விதிகளுடன் என்றைக்கும் முரண்படாத ஒரு வர்க்கம் வரலாற்றில் இருக்குமானால் அது தொழிலாளி வர்க்கமே. முதலாளி வர்க்கத்தைப் போலன்றி, தொழிலாளி வர்க்கம் தனது ஆட்சியை நிரந்தரமாக்க முயற்சிக்கவில்லை. ஒரு சமுதாய வர்க்கம் என்ற முறையில் தானே மறைந்துவிடக்கூடிய ஒரு சமுதாயத்தை கட்டியமைக்கவே அது முயன்று வருகிறது. அதன் போராட்டத்தின் அகவய நலன்களும், குறிக்கோள்களும் சமூக வளர்ச்சியின் எதார்த்த விதிகளுடன் முற்றிலும் ஒத்துப் போகக் கூடியது.

பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டம் முன்வைத்த பல்வேறு கேள்விகளுக்கு விடையாக வரலாற்று வழியில் தோன்றி வளர்ந்த தத்துவமே மார்க்சியம். அது உண்மையின் நலன்களால் வழிகாட்டப் படுகிறது. ஏனென்றால், அது எதார்த்தத்தை அறிவியல் வழியில் அறிந்து கொள்கிறது. மார்க்சியம் மட்டுமே ஒரே சமயத்தில், ஒரு அறிவியலாகவும் அரசியல் நடவடிக்கைக்கு ஒரு வழிகாட்டியாகவும் விளங்கி வருகிறது. மார்க்சியம் முழுமைக்கும் அதன் ஒவ்வொரு பகுதிக்கும் இது பொருந்தும்.

எந்த ஒரு தத்துவார்த்தக் கோட்பாடும் இயல்பாகவே ஒரு உலகக் கண்ணோட்டமாகும். அது எப்போதுமே ஏதேனும் ஒரு சமுதாய வர்க்கத்தின் நலன்களைப் பிரதிபலிக்கிறது. ஆகவே, ஒரு வர்க்கத்தின் நடைமுறைகளை முடிவு செய்யக்கூடிய பற்றுக் கோள்களை வகுத்தளிக்கும்படி தத்துவம் பணிக்கப்படுகிறது. எல்லாக் காலங்களிலும் ஏதேனும் ஒரு தத்துவார்த்தக் கொட்பாட்டில்ருந்தே சமூகக் கண்ணோட்டங்கள் பிறக்கின்றன.

மார்க்சியம் தொழிலாளி வர்க்கத்திற்குத் தனது உலகக் கண்ணோட்டத்தை வழங்குவதில் ஒரே ஒரு நோக்கத்தால் மட்டுமே வழிகாட்டப் படுகிறது. அது பிழையற்றதாக, சரியானதாக, வாழ்க்கைக்கு உண்மையானதாக அந்தக் கண்ணோட்டம் இருக்க வேண்டும் என்பதே. ஆகவே, அது தனது நிர்ணயிப்புகளில் எப்போதுமே விஞ்ஞானத்தைச் சார்ந்திருக்கிறது. மார்க்சியத்தின் ஆய்வுமுறை பொருள்முதல்வாத இயக்கவியல் அறிவியல் ஆகும்.

மார்க்சியத் தத்துவம் என்பது உணர்வை, அதன் தோற்றத்தைக் குறித்தும், சாராம்சத்தைக் குறித்தும் பார்க்கும்போது பொருளின் விளைபயனாக அதன் பிரதிபலிப்பாகவே பார்க்கிறது. எனவேதான் அது பொருள்முதல்வாதம் ஆகிறது. இயக்கவியல் பொருள்முதல்வாதம் மார்க்சியத்தின் தத்துவம் ஆகும்.

மார்க்சியமானது, உலகை அதன் தொடர்ச்சியான, இடையீடில்லாத வளர்ச்சிப் போக்கில் ஆராய்கிறது. இயற்கைக்கும், சமுதாயத்திற்கும் பிரயோகிக்கப்படக்கூடிய அதன் பொதுவான வளர்ச்சி விதிகளைக் கண்டுபிடித்தது. மார்க்சியம் ஒருவகையில் தர்க்கவியல் பொருள்முதல்வாதமாகும்.

வளர்ச்சி என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில், அந்தக் குறிப்பிட்ட இடத்தில் நிலவும் எதிர்மறைகளின் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. சமுதாயத்தைப் பொறுத்த மட்டில் இது நேர் எதிரான சமூக சக்திகளான வர்க்கங்களின் போராட்டமாக அமைந்துள்ளது. தொழிலாளி வர்க்கம் தனது விடுதலைக்கான போராட்டம் நடத்துவதற்கான தார்மீக நியாயத்தை மார்க்சியத்திடமிருந்தே பெறுகிறது. வர்க்கப் போராட்டத்தின் தத்துவமாக மார்க்சியம் இருக்கிறது.

ஆனால், முதலாளித்துவம் சோசலிசத்திற்கு வழிவிட வேண்டும் என்ற நிர்ணயிப்பு தத்துவத்திலிருந்து தோன்றுவதல்ல. ஒரு குறிப்பிட்ட சமூக பொருளாதார அமைப்பின் சமூக உற்பத்தி தொடர்பான விதிகளையும், பொருளாயத அனுகூலங்களின் உற்பத்தி மற்றும் விநியோகம் பற்றிய விதிகளையும் ஆராயும் ஒரு விஞானத்தினால்தான் இத்தகைய ஒரு நிர்ணயிப்பைப் பெற முடியும். அந்த விஞ்ஞானம்தான் அரசியல் பொருளாதாரம்.

மார்க்சிய சித்தாந்தம் அரசியல் பொருளாதாரத்திற்கு ஆராய்ச்சிக் கோட்பாடுகளை வழங்கியுள்ளது. அது  சமுதாய வாழ்வின் உண்மையான அடிப்படை பொருளாயத உற்பத்தியில் அடங்கியுள்ளது என்பதை அறுதியிட்டுக் கூறுகிறது. ஒவ்வொரு சமுதாய அமைப்பும் வரலாற்று வழியில் தவிர்க்க முடியாத புறச் சூழ்நிலைகளால் உருவாகி நிலைபெறுகிறது. அந்த நிலையும் மறுக்கப்பட்டு மாற்றத்துக்கு உள்ளாவது என்பதும் தவிர்க்க முடியாத வளர்ச்சி விதி என்பதையும் கூறுகிறது. எனவே, முதலாளித்துவ உற்பத்தி முறை என்பது வரலாற்று வழியில் தவிர்க்க இயலாததாக இருப்பினும் அது மாறுவதற்குரியது என்பதையும் அரசியல் பொருளாதாரமே கண்டு சொல்லக் கூடியதாக இருந்தது.

கம்யூனிச அமைப்பு தோன்றி வளர்வதைத் தீர்மானிக்கும் சோஷலிச உற்பத்தியின் வளர்ச்சி சம்பந்தப்பட்ட விதிகளையும் மார்க்சிய அரசியல் பொருளாதாரம் ஆராய்கிறது. இவ்வாறு, வரலாற்று வளர்ச்சிப் போக்கின் ஒரு இயல்பான கட்டமாக கம்யூனிசக் கட்டம் தோன்றுவது தவிர்க்க முடியாதது என்பதை மார்க்சியம் மெய்ப்பித்துக் காட்டுகிறது.

விஞ்ஞானக் கம்யூனிசம் என்பது முதலாளித்துவம் சோசலிசமாகப் புரட்சிகரமாக மாறுவது சம்பந்தப்பட்ட விதிகளையும், அதேபோல் சோசலிசத்தையும் கம்யூனிசத்தையும் நிர்மாணிப்பது சம்பந்தப்பட்ட விதிகளையும் விவரிக்கும் ஒரு கம்யூனிசக் கோட்பாடாகும். இது ஒரு உறுதியான விஞ்ஞானத் தத்துவமான  அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படையில் அமைந்த ஒரு கோட்பாடாகும்.

ஆக, மார்க்சியம் ஒரு விஞ்ஞானம். உழைப்பாளி மக்களின் உணர்வு பூர்வமான நடவடிக்கைகள் மூலமாகத்தான், சமுதாயத்தை சோஷலிச ரீதியாக மாற்றுவதும், அதனை மேலதிகமாக வளர்ச்சியுறச் செய்வதும் சாத்தியம் என்பதால், மார்க்சியத்தைப் பரந்த வெகுஜனப் பகுதியினரின் இயக்கத்துடன் பிரிக்கமுடியாத வகையில் இணைப்பது இன்றியமையாததாகிறது.

உலகைப் புரட்சிகரமாக மாற்றும் சித்தாந்தமான மார்க்சிய சித்தாந்தம் அப்போதுதான் உருவாக்கப்பட்டு வந்த சமயத்திலேயே மார்க்ஸ் அதனை உழைப்பாளி மக்களின் ஆன்மீக ஆயுதம் என்று வர்ணித்தார்.

மார்க்சியம்தான் விஞ்ஞானக் கோட்பாட்டை வெகுமக்களின் சமூக நடவ்டிக்கைகளுடன் பிணைக்கும் பணியை முதல் தடவையாக முன்வைத்தது. நாம் ஒரு நியாயமான இலட்சியத்திற்காகப் போராடி வருகிறோம், இந்தப் போராட்டம் வெற்றி வாகை சூடுவது தவிர்க்க முடியாதது என்ற திட நம்பிக்கையை மக்கள் மனத்தில் ஊட்டுவது இந்தப் பிணைப்பின் ஒரு நோக்கமாகும். உழைப்பாளி மக்களுக்கு அவர்களின் பணிகளையும்

அவற்றை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளையும் பற்றிய ஒரு தெளிவான உணர்வை ஏற்படுத்துவது இந்த பிணைப்பின் மற்றொரு நோக்கம் ஆகும்.

மார்க்சியம் விஞ்ஞானத் தன்மை கொண்டது. விஞ்ஞானத்தில் இருந்தே அது தனது ஆற்றலைப் பெறுகிறது. ஆனால் எந்த ஒரு விஞ்ஞானமும் காலத்திற்கு ஒவ்வாததாகிவிட முடியும். ஒரு விஞ்ஞானம் வளர்ச்சியுறுவது நின்றுவிடும்போது, அது காலத்திற்கு ஒவ்வாததாகிவிடுகிறது.

அறிவு, அது எவ்வளவு சரியானதாக இருந்தபோதும், முற்றிலும் பூரணத்துவம் உடையதாக ஒருபோதும் ஆக முடியாது. அறிவின் குறிக்கோள்களும், பணிகளும், சாத்தியக் கூறுகளும் நடைமுறையால் அதாவது, வாழ்க்கை நிலைமைகளைத் தோற்றுவிக்கும் மனித நடவடிக்கைகளாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. நடைமுறை ஒருபோதும் ஸ்தம்பித்து இருப்பதில்லை. அது மேலும் மேலும் வளர்கிறது. அப்போது, அறிவின் முன்னாள் எத்தனை எத்தனையோ புதிய புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது. அவற்றிற்குத் தீர்வு காணுவதற்கு அவசியமான முன் தேவைகளையும் உண்டுபண்ணுகிறது. அறிவு விரிந்து வளர்ந்து எதார்த்தத்தின் மென்மேலும் அதிகமான துறைகளுக்கு பரவுகிறது. அது ஆழமடையும்போது தனது உள்விதிகளைப் பற்றி மேன்மேலும் அதிகமாகத் தெரிந்து கொள்கிறது.

ஆக, ஒரு விஞ்ஞானம் மேலும் வளர்ச்சியுறுவதற்கான உள்ளாற்றலைப் பெற்றிருந்தால்தான், அதாவது அது படைப்பாக்கத் தன்மை கொண்டதாக இருந்தால்தான், அது விஞ்ஞானமாக நீடிக்க முடியும். ஒரு சித்தாந்தம் எல்லா விஞ்ஞானங்களின் நவ நவீன தகவல்களையும் தனது பகுத்தாய்வு எல்லைக்குள் இடையறாது ஈர்த்துக் கொள்ளும் போதே அது விஞ்ஞான ரீதியானதாகிறது.

மார்க்சியத்தின் வரலாறு முழுவதும் அதன் படைப்பாக்கத் தன்மைக்கு சான்று பகர்கிறது. தனக்கு முந்திய விஞ்ஞான, சமூக அறிவுச் செல்வங்கள் அனைத்தையும் கிரகித்துக் கொண்டு, இதுநாள் வரையிலும் சேகரித்துக் குவிக்கப்பட்ட ஒட்டுமொத்த மனித அறிவின் அடிப்படையில்தான் மார்க்சியம் உதித்தெழுந்தது.

மார்க்சும் எங்கெல்சும் புதிய புதிய வரலாற்று அனுபவங்களை, புதிய புதிய விஞ்ஞானத் தகவல்களைத் தொகுத்து வந்தனர். அவற்றின் அடிப்படையில் அவசியமான திருத்தங்களைச் செய்து தங்கள் சித்தாந்தத்தை வளர்த்து வந்தனர்.

**1848-1851** ஆம் ஆண்டுகளின் முதலாளித்துவ புரட்சிகளின் அனுபவம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டும் முதல் முயற்சியாக விளங்கிய **1871** ஆம் வருடப் பாரிஸ் கம்யூனின் அனுபவம், பாட்டாளி வர்க்கம் நடத்திய வர்க்கப் போராட்டத்தின் நடைமுறை அனுபவம், இயற்கை விஞ்ஞானம், சமூக சிந்தனை பற்றிய புதிய செய்திகள் ஆகியவற்றை இவ்வகையில் முக்கியமாகக் குறிப்பிடலாம்.
**1890** ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்வதற்கான அறிகுறிகள் தென்பட்டன. உடனே எங்கெல்ஸ் இந்தப் புதிய போக்கைப் பற்றி ஆராய்வதில் இறங்கினார். தாமும் மார்க்சும் சேர்ந்து கண்டுபிடித்த பொருளாதார சமூக வளர்ச்சிப் போக்குகளின் கண்ணோட்டத்தில் இருந்து இதனை ஆராய்வதில் ஈடுபட்டார்.

மார்க்சிய வளர்ச்சியில் புதிய கட்டம் விளாதிமிர் லெனின் என்ற ஆளுமையின் மேதமையோடு பிணைந்துள்ளது. முதலாளித்துவம் தனது ஏகாதிபத்தியக் கட்டத்தில் பிரவேசித்திருந்த, முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறிச் செல்லும் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகியிருந்த புதிய வரலாற்று நிலைமைகளில் லெனின் வாழ்ந்து பணியாற்றி வந்தார்.

லெனின் மார்க்சியத்தை மேலும் செழுமைப் படுத்தினார். எடுத்துக் காட்டாக, இயற்கை விஞ்ஞானத்தில் ஏற்பட்ட புரட்சி பொருளின் தன்மையையும், அது நீடிக்கும் வடிவங்களையும் பற்றிய பிரச்சினையை எழுப்பியது; இதன் மூலம் மார்க்சிய அறிவுக் கோட்பாட்டின் முன்னாள் அனேக பிரச்சினைகளைத் தோற்றுவித்தது.
ஏகாதிபத்தியத்தின் தனிச் சிறப்பான கூறுகளும், சோசலிசப் புரட்சியும், சமுதாயத்தை சோஷலிச ரீதியில் மாற்றுவதற்கான முயற்சியும், தர்க்கவியல் மேலும் வளர்வதையும், சமூக இயக்க நிகழ்வுகளை அவற்றின் சகல சிக்கல்களுடனும் முரண்பாடுகளுடனும் ஆராய்வதையும் கோரின. மேலும், புரட்சிப் போராட்டமும் சோஷலிச நிர்மாணமும் அரசியல் கட்சிகளது கருத்துக்கள், நடவடிக்கைகள் போன்ற அகநிலை கூறுகளின் பாத்திரம் எனும் மிக முக்கியமான பிரச்சினையை எழுப்பின. இந்த அகநிலை கூறுகள் பல வழிகளில் வெகுமக்களின் உண்மையான நடவடிக்கைகளையும், வரலாற்றின் முன்னேற்றத்தையும் முடிவு செய்கின்றன. இவை யாவும் சித்தாந்தத்துடன் தொடர்புடையவை. இந்தப் பிரச்சினைகள் அனைத்திற்குமான விடைகளை லெனினது அறிவுச் செல்வத்தில் காணலாம்.

அரசியல் பொருளாதாரத் துறையில் லெனின் ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் மிக உயர்ந்த கட்டமாக, கடைசிக் கட்டமாக இருக்கும் ஒரு கோட்பாட்டை உருவாக்கினார். அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் அதன் உள்ளார்ந்த விதிகளைக் கண்டு பிடித்தார். சோசலிசத்தின் பொருளாதார விதிகளை ஆராய்வதற்கான வழிகளை வகுத்துத் தந்தார். ஆக, விஞ்ஞானக் கம்யூனிசக் கோட்பாட்டின் வளர்ச்சிக்கு லெனின் ஆற்றிய ஆக்கபூர்வமான பங்கு முதலாளித்துவத்திற்குப் பதிலாகப் புரட்சிகரமான முறையில் சோசலிசத்தைக் கொண்டு வருதல், சோஷலிச சமுதாயத்தை அரசியல் ரீதியில் ஒழுங்கமைத்தல் ஆகிய பிரச்சினைகளுடன் முதன்மையாகத் தொடர்பு கொண்டது. லெனினியம் ஏகாதிபத்தியக் காலகட்டத்தின் மார்க்சியம் ஆகியது.
■

## பாட்டாளி வர்க்கப் பண்பாடு

*உழைப்பை நேசிப்பதும், உழைப்புச் சுரண்டலை ஒழிக்க உயிருள்ளவரை போராடுவதுமே உன்னத வாழ்க்கை முறை ஆகும்.*

*உழைப்புச் சுரண்டலில் இருந்து மனிதகுலத்தை விடுதலை செய்யும் உன்னத இலட்சியத்திற்கு மீதமுள்ள வாழ்நாளை அர்ப்பணிப்போம்.*

*தமிழ்ப் பண்பாடு, இந்துப் பண்பாடு, திராவிடப் பண்பாடு, இந்தியப் பண்பாடு ஆகாத கூப்பாடு. எமக்குத் தேவை பாட்டாளிவர்க்கப் பண்பாடு.*

*உழைக்கும் மக்களின் நலன்களுக்கு ஏற்ற விதத்தில் தனி ஒருவர் தனது வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துக்கொள்வதே பாட்டாளி வர்க்கப் பண்பாடு.*

# மே17 இயக்கம் என்ன சொல்கிறது?

**பார்வையாளன்**

தமிழர் உரிமையும் தற்சார்புத் தமிழ்நாடும் என்ற தலைப்பில் பெங்களூரு நியூ மிஷன் ரோட்டில் பூர்ணிமா டாக்கீசுக்கு அருகில் உள்ள கனரா வங்கி எஸ்.சி./ எஸ்.டி பிரிவு சங்க கட்டிடமான ஜெய் பீம் பவனின் மூன்றாம் தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் மே 17 இயக்க அரங்கக் கூட்டம் 10 - 12 - 2017 ஞாயிறு அன்று முற்பகலில் நடைபெற்றது. இயக்க முன்னணித் தோழர்களான பிரவீன் மற்றும் திருமுருகன் காந்தி ஆகியோரின் உரைகளை முழுவதும் கேட்கும் வாய்ப்பு கிட்டியது.

த நா மா லெ கவின் முன்னாள் தோழர் கி வெ பொன்னையன் மே 17 இயக்கத்துடன் கொண்டிருக்கும் நெருக்கம் மற்றும் லண்டனில் வசிக்கும் தோழர் யமுனா ராஜேந்திரன் போன்றோர் அதை தீவிரமாக ஆதரித்து வருவது போன்ற காரணங்களால் அது மார்க்சீயம் சார்ந்த இயக்கம் என்ற நம்பிக்கையுடன் சென்றேன்.

தோழர் பிரவீன் பேசும்போது தமிழகத்தின் பெரியார் இயக்கங்களின் தொடர்ச்சியே மே 17 இயக்கம் என்று குறிப்பிட்டார். தோழர் திருமுருகன் காந்தி பேசும்போது முத்துக்குமார்தான் எங்கள் இயக்கத்தின் தலைவர். முத்துக்குமாரின் இறுதி ஊர்வலத்தின் போதுதான் நானும் பிரவீனும் சந்தித்துக் கொண்டோம். அன்று தொடங்கியதே மே 17 இயக்கத்தின் பயணம் என்று குறிப்பிட்டார்.

திருகோணமலை கப்பல்படைத் தளத்திற்காக அமெரிக்காவும், வணிக நலன்களுக்காக இந்தியாவும் ஈழப் பிரச்சினையில் சிங்கள அரசை ஆதரிப்பதாகக் குற்றம் சாட்டினார். 2007 மார்ச்சில் அமெரிக்கா இலங்கையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்குப் பிறகே ஈழப் போராட்டத்தின் போக்கு மாறிவிட்டது என்று குறிப்பிட்டார்.

மோடி அரசு பார்ப்பன பனியாக்களின் அரசு என்றும் மோடி சுற்றுப்பயணம் செல்லும் இடங்களுக்கு எல்லாம் ஆறு கார்ப்பரேட் முதலாளிகளை அழைத்துச் சென்று அங்கே வணிக ஒப்பந்தங்களை செய்து கொள்கிறார். ஏன் தமிழ்நாட்டு முதலாளிகளான நமது சரவணா ஸ்டோர்ஸ் அண்ணாச்சி போன்றோரை அவர் அழைத்துச் செல்வதில்லை என்று கேட்டார்.

தமிழர்கள் தங்கள் நிலங்களை பிற மாநிலத்தவர்களுக்கு விற்கக் கூடாது என்றார். கேரளா மக்கள் தங்கள் நிலங்களை எவ்வளவு விலை கொடுத்தாலும் பிற மாநிலத்தவர்களுக்கு விற்க மாட்டார்கள் என்றும், தமிழர்கள் அவ்வாறு இல்லை என்றும் பெருமளவுக்கு நிலங்களையும் தொழில்களையும் மார்வாரிகள் கைப்பற்றிக் கொண்டு விட்டார்கள் என்றும் சொன்னார்.

பெங்களூரில் அப்பார்ட்மென்ட் வாங்குவதற்குப் பதில் தமிழ்நாட்டில் நிலம் வாங்குவதில் உங்கள் சேமிப்பை முதலீடு செய்யுங்கள். அதை நீங்கள் விவசாயம் செய்யாவிட்டாலும் மற்றவர்களுக்கு குத்தகைக்கு விடுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

தற்சார்பு என்பது இறையாண்மையைக் குறிக்கிறது என்று சொன்னார். எல்லா வர்க்கங்களையும் நேசிக்க வேண்டும் என்று சொன்னார்.

தமிழர்கள் உலகெங்கும் நல்ல வேலையாளாக இருப்பதற்கே தங்களை பயிற்றுவித்துக் கொள்கிறார்கள். ஆளுமைப் பண்புள்ள தொழில் முனைவோர்களாக தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். உங்கள் சேமிப்பை தமிழ்நாட்டில் தொழில் தொடங்க முதலீடு செய்யுங்கள் என்றும் கேட்டுக் கொண்டார்.

தமிழர் பண்பாட்டிற்கும் ஆரியப் பண்பாட்டுக்கும்உள்ள அடிப்படை வேறுபாட்டை வழிபாட்டு முறைகளைக் கொண்டும், திருக்குறளை முன்வைத்தும் விளக்கினார். குமரி மீனவர்களின் துயரத்தையும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சிவில் சமூகக் கட்டமைப்பு குறித்தும், பெரியாரை முன் நிறுத்துவதன் அவசியத்தையும் பேசினார்.

தேசிய இனங்களின் விடுதலை கோரிக்கை ஒடுக்குமுறை சார்ந்ததல்ல உரிமை சார்ந்ததாகவே தற்போது உலகெங்கும் பார்க்கப்படுவதாக சொன்னார். கட்டலோனியா, குர்திஸ்தான் பற்றி சொன்னார். அரசியல் கட்சிகள் அல்ல இயக்கங்களே மக்களின் நலனில் அக்கறை கொண்டிருப்பவை என்று சொன்னார். தங்கள் இயக்கத்தில் சேரவும், நிதி உதவவும் கோரினார்.

தோழர்களின் உரைகளில் தள்ளக்கூடிய விடயங்கள் மட்டுமின்றி ஏற்கக் கூடிய விடயங்களும் நிறையவே இருந்தன. ஒட்டுமொத்தத்தில், மே 17 இயக்கமும் வர்க்க சமரசத்தை வலியுறுத்தும், முதலாளிய தேசியவாத இயக்கங்களில் ஒன்று என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

த நா மா லெ க போலவோ தோழர் தியாகுவின் தமிழ்த் தேச விடுதலை இயக்கம் போலவோ தங்களை மார்க்சீயர்கள் என்று உரிமை கோரவில்லை என்ற அளவுக்கு பரவாயில்லை என்று தோன்றியது. முழு உரையிலும் ஒரே ஒரு இடத்தில் தவிர வேறு எங்கும் மார்க்சீயம் என்ற சொல்லை அவர் பயன்படுத்தவில்லை. அந்த ஒரு இடத்திலும் கூட 'மா.லெ.இயக்கங்களுடன் சேர்ந்து ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தை முற்றுகை இட்டோம்' என்பதாகக் குறிப்பிட்டார். ■

## வர்க்க ஒற்றுமைக்கும் சர்வதேசியத்திற்கும் எதிரான தோழர் யமுனா ராஜேந்திரனின் தேசியம்

*தேசியத்திற்கும் மார்க்சியத்திற்கும் இடையிலான வரலாற்று ரீதியான உறவை ஆய்வு செய்த இலத்தீன் அமெரிக்க மார்க்சியரான ரொனால்ட் மங்க் சொல்வது, இந்த இருபத்தியோராம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் மிகப் பொருத்தமான கூற்றாகும்:*

*"ஒரு தேசம் மற்றொரு தேசத்தை இன்னும் ஒடுக்கிக் கொண்டிருக்கும்வரை வர்க்க ஒற்றுமை என்பது சாத்தியமில்லை. தொழிலாளி வர்க்கத்தின் இடையிலேயே இருக்கிற நிறவாதம், பால் நிந்தனை போன்ற பிரிவினைக்கான ஆதாரங்களைப் பட்டியலிடக்கூடிய நிலையில், குறுகிய நோக்கும் அதிகார விருப்பும் கொண்ட தேசியத்திற்கான உடனடி எதிர்வினையாக சர்வதேசியத்தை வைக்க முடியாது."*

**தோழர் யமுனா ராஜேந்திரன்,**
*நூல்: நான் பின்நவீனத்துவ நாடோடி இல்லை.*

# ஸ்டாலின் குறித்த வரலாற்று ரீதியான பார்வை



யமுனா ராஜேந்திரன்

நடந்ததெல்லாம் நன்றாகவே நடந்தது என்று சொல்லிவிட்டுப் போவது மார்க்சிய அணுகுமுறை அல்ல. ஸ்டாலின் பிரச்சினையை எவரும் சாதாரணமாக ஒதுக்கிவிட்டுப் போக முடியாது.

ஸ்டாலின் குறித்து இரு விதமான எக்ஸ்ட்ரீம் பார்வைகள் உண்டு. ஸ்டாலின் ஒரு சர்வாதிகாரி. ஒன்றரைக் கோடிப் பேரைக் கொன்றார். அவரது ஆட்சி கொடுங்கோன்மை ஆட்சி என்பது ஒன்று. இன்னொரு பார்வை, ஸ்டாலின் காலத்தில் அவர் எந்தவொரு நடைமுறைத் தவறும் விடவில்லை. அவர் லெனினியத்தை உயர்த்திப் பிடித்தவர். அவர் மீது சொல்லப்படும் பாரிய கொலைக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய். இவை இரண்டும் ஸ்டாலின் குறித்த வரலாற்று ரீதியான பார்வை இல்லை.

மென்ஷ்விக் அரசியலைப் பேசிக் கொண்டிருந்த அலக்சான்டரா கொலான்டாயை, ஜெர்மனியுடன் உடன்பாட்டுக்குப் போவது சாத்தியமில்லை என்ற டிராட்ஸ்கியை, பல்வேறு தருணங்களில் அரசியல் விஷயங்களில் முரண்பட்ட இந்த இரு ஆளுமைகளைத் தனது போல்ஷ்விக் அரசியலில் இணைத்தார் லெனின். விவசாயிகளை இணக்கத்துடன் தொழிலாளிகளுடன் இணைத்து சோசலிசத்தைக் கட்டுவது பற்றி யோசித்தார் லெனின். கட்சிக்குள் ஜனநாயக மத்தியத்துவம் என்பதை உரையாடலின் வழி நிலைநாட்டினார் லெனின். குறிப்பாக, மாரிக்கால அரண்மனையைக் கைபற்றும் முடிவு. சோசலிச சமூகத்தில் ஜனநாயகம் பற்றி முற்கூறினார் லெனின்.

ஸ்டாலின் கட்சிக்குள் ஜனநாயக மத்தியத்துவத்திற்கு மாறாக மாற்றுக் கருத்தினரைத் தனிமைப்படுத்தி புரட்சியின் தலைவர்களை ஒவ்வொருவராக அழித்தார். தொழில் மூலதனத்திற்கு விவசாயிகளின் மீது வன்முறையைச் செலுத்தினார்.

*மாறுபட்ட கருத்துக் கொண்ட போல்ஷ்விக் கட்சி உறுப்பினர்களையும் துரோகிகள் எனும் பெயரில் அழித்தார். சமூக விஞ்ஞானங்கள், இயற்கை விஞ்ஞானங்கள், இவை குறித்த ஆய்வுகள், கலைஞர்களின் புதிய சொல்நெறிகள் இவற்றின் மீது தனது தனிப்பட்ட கட்டுப்பாட்டை நிலை நிறுத்தினார்.*

*இவையெல்லாம் குறித்து விரிவான ஆய்வு நூற்கள் மார்க்சியர்களாலேயே எழுதப்பட்டுள்ளன. ஸ்டாலின் காலத்தில் அழித்தொழிப்புகள் நிகழ்ந்திருக்கின்றன என்பன வெறும் அவதூறுகள் அல்ல. இதற்கான தொகையான ஆதாரங்கள் பெரஸ்த்ரோய்க்கா வெளிப்படைத் திட்டத்தின் கீழ் இப்போது கிடைக்கின்றன. இவையெல்லாம் இன்று சோசலிசத்தையும் ஜனநாயகத்தையும் இணைக்க நினைக்கிற எவரும் நிராகரித்துச் செல்ல முடியாது.*

*இதே வேளை, ஸ்டாலின் சர்வாதிகாரி என இட்லருடன் ஒப்பிடப்படுவதை, அவர் கோடிக் கணக்கானோரைக் கொன்றார் என்பதை நாம் நிராகரிக்கிறோம். ரஷ்ய ஆவணக் காப்பகப் புள்ளிவிவரங்கள் மேற்கத்திய கம்யூனிச விரோதிகளால் ஊதிப்பெருக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன. பாசிசத்தை வீழ்த்தியதில், உள்நாட்டில் எதிர்ப்புரட்சியை முறியடித்ததில் ஸ்டாலினது பாத்திரத்தை நாம் உயர்த்திப் பிடிக்கிறோம்.*

*முரண்பாடுகளைக் கையாளுவதில் ஸ்டாலினது தலைமைப் பண்பு குறித்த எச்சரிக்கையை லெனின் போல்ஷ்விக் கட்சியின் மத்தியக் குழுவுக்கு அனுப்பிய கடிதம் மெய்ப்பிக்கிறது.*

■

# பயனுள்ள வாழ்வு

**"வாழ்வு சகிக்க முடியாததாக ஆனபிறகும் எப்படி வாழ்வதென்பதைக் கற்றுக்கொள். உன் வாழ்வைப் பயனுள்ளதாக ஆக்கிக்கொள்.**

மனிதனது மதிக்க முடியாத இனிய உடைமைகளில் சிறந்தது அவனது வாழ்வாகும். அவன் ஒரு தடவைதான் வாழ முடியும். காலமெல்லாம் குறிக்கோள் இல்லாமல் பாழாக்கிவிட்டேன் என்ற வருத்தம் வதைப்பதற்கு வாய்ப்பு அளிக்காத வகையில் அவன் சீராக வாழ வேண்டும். அற்பனாக வாழ்ந்து இழிவு தேடினேன் என்ற அவமானம் உள்ளத்தை எரிப்பதற்கு இடமில்லாத வகையில் நேராக வாழ வேண்டும். உலகத்தின் தலைசிறந்த லட்சியத்துக்காக, மனித குலத்தின் விடுதலைப் போராட்டம் என்ற பொன்னான மார்க்கத்துக்காக, நான் என் வாழ்வு முழுவதையும் அர்ப்பணித்தேன் என்று இறக்கும் பொழுது கூறும் உரிமை பெறும் வகையில் அவன் வாழ வேண்டும். திடீர் நோயோ, சோக விபத்தோ வாழ்வுக்கு வெடிவைக்கக் கூடுமாதலால், மனிதன் தன் வாழ்வின் ஒவ்வொரு விநாடியையும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்."

**■ நிக்கோலாய் ஒஸ்திரோவஸ்கி**

# அற்பவாதிகள் குறித்த சித்திரம்

ஹென்றிஹ் வோல்கவ் எழுதிய "மார்க்ஸ் பிறந்தார்" நூலில் இருந்து

"பழைய உலகம் அற்பவாதிக்குச் சொந்தம் என்பது உண்மையே. ஆனால் நாம் பயந்து பின்வாங்க வேண்டிய பூச்சாண்டியாக அவரை நினைக்கக் கூடாது. அதற்கு மாறாக நாம் கவனமாகக் குறித்துக் கொள்ளவேண்டும். இந்த உலகச் சீமானாகிய அவரை நாம் ஆராய்வது பயனுள்ளது."

**கார்ல் மார்க்ஸ்**

## அற்பவாதிகளும் அற்பவாதமும்

அறிவியல் மற்றும் சமூகத் துறையில் மலட்டுத்தனமான மனோபாவத்தைக் கொண்டவர்கள் அற்பவாதிகள். அவர்களுடைய சித்தாந்தம் அற்பவாதம் எனப்படும்.

## மார்க்சும் அற்பவாதமும்

அற்பவாதியின் உலகத்துடன் நடத்திய போராட்டமே மார்க்சின் திறமையையும், போராட்டக்காரர், சிந்தனையாளர், புரட்சிக்காரர் என்ற முறையில் அவருடைய ஆளுமையையும் கூர்மையாக்கி வளர்த்தது.

அவர் தன்னுடைய பள்ளிப் பருவத்திலேயே அற்பவாத வாழ்க்கையின் ஆனந்தமான இலட்சியத்தைத் தீவிரமாக வெறுப்பதற்குத் தொடங்கியிருந்தார்.

மார்க்ஸ் பிற்போக்கானவை அனைத்தையும் வெறுத்தார். இந்த வெறுப்பைப் புத்தகங்களிலிருந்து மட்டுமல்லாமல் தன்னைச் சுற்றியிருக்கும் யதார்த்தத்திலிருந்தும் பெற்றுக்கொண்டார்.

சுயதிருப்தியடைகின்ற அற்பவாதத்தை, அது எந்தத் துறையில் -- தனிப்பட்ட உறவுகளில், அன்றாட வாழ்க்கையில், விஞ்ஞானத்தில், கவிதையில், அரசியலில் அல்லது புரட்சிகரப் போராட்ட நடைமுறையில் -- எந்த வடிவத்தில் தோன்றினாலும் மார்க்ஸ் அதைக் கண்டு மிகவும் அருவருப்படைந்தார்.

மார்க்ஸ் முதலாளி அல்லது அற்பவாதி என்று பொருள்படும் "பர்கர்" என்ற சொல்லைத் தீவிரமான அருவருப்புடன் உச்சரித்தார்.

## அற்பவாதத் துரோகிகள்

தனிப்பட்ட புகழ் மற்றும் அந்தஸ்தை அடைவதற்காகப் புரட்சிகரமான கோஷங்களை உபயோகிப்பது பாட்டாளி வர்க்க இலட்சியத்துக்குச் செய்யப்படுகின்ற மிகக் கேவலமான துரோகம் என்று மார்க்ஸ் கருதினார். வாயாடித்தனமான அரசியல் சூழ்ச்சிக்காரர்கள் ஆர்ப்பாட்டமான சொற்றொடர்களுக்குப் பின்னால் தங்களுடைய திறமையின்மையையும் சூன்யத்தையும் மறைத்துக் கொள்கிறார்கள்.

இவர்களுடைய போலிப் புகழை மார்க்ஸ் வெறுத்தார். அவை அனைத்துக்கும் பின்னால் அருவருப்புத் தருகின்ற போலித்தனமான அற்பவாதம் இருப்பதை மார்க்ஸ் தவறாமல் கண்டுபிடித்தார்.

**அற்பவாதத்தின் சாராம்சம்**

அற்பவாதம் எவ்விதத்திலும் ஒரு தேசியக் கண்டுபிடிப்பு அல்ல. அது குட்டிமுதலாளி வர்க்க சுயதிருப்தி, போலியான மத ஆசாரம், இதயத்தில் கைக்கூலித்தனத்தை வைத்திருக்கின்ற முன்னாளைய கைக்கூலியின் அடிமைப்புத்தி ஆகியவற்றின் இயற்கையான விளைவு.

பணம் திரட்டுகின்ற அற்பவாதிகள், முதலாளி வர்க்கத்தினர் குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பது சுலபம் என்ற நம்பிக்கையில் தாங்கள் ஒடுக்கப்பட்டு அவமதிக்கப்படுவதை ஏற்றுக் கொண்டார்கள், தொடர்ச்சியான சமூகக் குழப்பத்தில் செல்வத்தின் வற்றாத ஊற்றுக்களைக் கண்டுபிடித்தார்கள்.

**அடிமைத்தனமும் போலி ஆசாரமும்**

அடிமைத்தனம் மற்றும் போலி ஆசாரத்தைக் கொண்ட மதத்தின் முறைப்படியான வழித்தோன்றலாகிய அற்பவாதி தன்னுடைய குறுகிய நெற்றியில் இரண்டு பெற்றோர்களின் முத்திரையையும் தாங்கி நிற்பவர். எசமானராக அல்லது ஊழியனாக, சாதாரணக் கந்தலாடைக்காரனாக அல்லது மலிவான கருத்துக்களை விற்பனை செய்பவனாக அவர் இருக்கமுடியும். எல்லா உதாரணங்களிலுமே தன்னுடைய மேலதிகாரியிடம் -- தன்னை வேலைக்கு வைத்திருப்பவர், அரசர் அல்லது கடவுளிடம் -- மண்டியிடுவதும் அடிமையாவதும் அவரிடமுள்ள குறிப்பிடத்தக்க பண்பாகும். பல நூற்றாண்டுகளாக வளர்ந்து கெட்டியாகவுள்ள இந்த அடிமைத்தனம் அற்பவாதிக்கு, அவருடைய உளவியலுக்கு, அவருடைய ஆன்மீக உலகத்துக்கு ஒரு உள்ளீடான, உணர்வில்லாத அவசியமாக இருக்கிறது. அவருடைய சிந்தனையையும், உணர்ச்சிகளையும் வறட்டுக் கோட்பாடுகள் என்ற திரைகள் மறைக்கின்றன. அவர் தன்னுடைய இதயத்திலும் தலையிலும் விலங்குகளைச் சுமந்து செல்கிறார். ஆகவே அவற்றை மதிக்கிறார். சில சூத்திரங்கள் இல்லாமல், மேலே இருந்து வருகின்ற சுற்றறிக்கைகளும் உத்தரவுகளும் இல்லாமல் அவரால் தன்னுடைய வாழ்க்கையைப்பற்றிக் கற்பனை செய்யக்கூட முடியாது. சுதந்திரமாகச் செயலாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகின்ற பொழுது அவர் சங்கடமடைகிறார். அவருக்குத் தேர்வுச் சுதந்திரம் கொடுத்தால் அவர் சுதந்திரத்தை ஒருபோதும் தேர்ந்தெடுக்கமாட்டார்.

**அற்பவாதியின் நற்பண்பு?**

அற்பவாதி தன்னுடைய சொந்தப் புனிதத்தன்மை, தன்னுடைய நடத்தையின் குறைசொல்ல முடியாத "ஒழுக்கத்தில்" மிகவும் போதையடைந்திருப்பதால் எல்லோருக்கும் "ஒழுக்கத்தைப் போதிப்பது", எல்லோரையும் சரியான பாதையில் இட்டுச்செல்வது தன்னுடைய புனிதமான கடமை என்று கருதுகிறார்.

ஒரு நபர் வசதியாக வாழ்க்கை நடத்த உதவி செய்யாத எப்பொருளைப் பற்றியும் அறியாதிருப்பது உயர்வுடையது என்று கருதுகிறார். அப்படியே அவர் தன்னுடைய சொந்த அறிவின்மையை மிகவும் உயர்வுடைய நற்பண்பு என்று அகம்பாவமான முறையில் பாராட்டுகிறார்.

**அற்பவாதிகளின் நடிப்பு**

அவர்கள் போராட்டக்காரர்களைப் போல நடிப்பதையும் விரும்பாதவர்கள்.

அல்ல, ஆனால் அவர்கள் எப்பொழுதுமே ”மரணமடையும் வரை” போராடுபவர்கள் அல்ல, ஆனால் வயிற்றுக்காகப் போராடுகிறவர்கள்.

அவர்கள் சிந்தனையாளர்களைப் போல நடிக்க முயற்சிக்கின்றார்கள், ஆனால் சாதாரணமாக ”தெய்வச் செயல்” என்பதற்கு மேல் அவர்களால் போக முடியவில்லை. அலுப்புத் தருகின்ற, சிறுதரமான செய்திகளிலும், ”ஆன்மிக அறிவுரைகளைக்” கொண்ட வீண் பேச்சுக்களிலும் தங்களுடைய அறிவு மந்தத்தை நயப்படுத்துகிறார்கள்.

## ஜெர்மன் அற்பவாதி

அற்பவாதம் பல்வேறு நாடுகளில் அவற்றின் வரலாற்று நிலைமைகளுக்கும் தேசிய குணாம்சத்துக்கும் ஏற்றவாறு வளர்ச்சியடைந்தது.

ஜெர்மன் அற்பவாதி ஆட்சியில் இருப்பவர்களிடம் அடிமையாக இருந்ததோடு திருப்தியடையவில்லை, அவர் ”தன்னுடைய இதயத்தில் வைத்திருந்த” கடவுளுக்கும் அடிமையாக இருந்தார்.

## ரூகேயிடம் அற்பவாதம்

மார்க்சின் கம்யூனிசத்தின் விளைவாக ரூகேயிடம் அற்பவாதியின் பீதி தோன்றியது.

ரூகே எவ்வளவுதான் தீவிரவாதத்தைப் பேசினாலும் அவர் சுதந்திரத்தைப்பற்றிக் கனவு காண்கின்ற, ஆனால் அதற்குச் சிறிதுகூட தியாகம் செய்ய விரும்பாத அற்பவாதியாகவே இருந்தார்.

## அற்பவாதியும் விஞ்ஞானமும்

அற்பவாதி விஞ்ஞானத் துறையில் உண்மையைத் தேடுவதற்கு மாறாக, உண்மையை மறைப்பதிலும் திரித்துக் கூறுவதிலும் அக்கறை காட்டுகிறார். தன்னுடைய நேர்மையற்ற மழுப்பலின் மூலம் ஆளும் வர்க்கத்தினருடைய நிலையையும், அதன் மூலம் தன்னுடைய நிலையையும் வசப்படுத்துவதற்குப் பாடுபடுகிறார். உண்மைப் போலியான பேச்சுக்குப் போலி விஞ்ஞான உடையை மாட்டுவதன் மூலம் அவர் உண்மையைக் குழிதோண்டிப் புதைக்கிறார்.

அற்பவாதி விஞ்ஞானத்தைக் கருவியாக உபயோகித்து விஞ்ஞானத்துக்குச் சம்பந்தமில்லாத தன்னுடைய சொந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு முயற்சிக்கிறார். அவர் “கீழான நோக்கங்களுக்கு” அதை உபயோகிக்கிறார்.

*“ஆனால் ஒரு மனிதர் விஞ்ஞானத்தை விஞ்ஞானத்திலிருந்து வருவிக்கப்படாத ஒரு கருத்துக்கு, (அது எவ்வளவு தவறானதாக இருந்தாலும்) வெளியே, அந்நிய, வெளிப்புற நலன்களிலிருந்து வருவிக்கப்பட்ட கருத்துக்குத் தகவமைக்க முயற்சிக்கும் பொழுது நான் அந்த நபர் “இழிவானவர்” என்கிறேன்.(மார்க்ஸ்)*

## மார்க்சியத்திற்கு எதிராக அற்பவாதம்

முதலாளி வர்க்கச் சித்தாந்திகள் மார்க்சியத்தை “மறுப்பதற்கும்”, ”அழிப்பதற்கும்” தங்கள் முழுச்சக்தியையும் தொடர்ந்து செலவிடுகிறார்கள். அவர்கள் மார்க்சியத்துக்குப் பதிலாக இன்றைய அற்பவாதிகள் விரும்புகின்ற வேறு தத்துவங்களை நிறுவுவதற்கு முயற்சி செய்கிறார்கள். விஞ்ஞான சோஷலிசத்துக்குப் பதிலாக மார்க்சும் எங்கெல்சும் தம் காலத்தில் கூர்மையாகக் கிண்டல் செய்த “மிதவாத சோஷலிசத்தை” நிறுவப் பாடுபடுகிறார்கள்.

■

# வர்க்கக் கட்சி

கம்யூனிஸ்டுகள் ஏனைய தொழிலாளி வர்க்கக் கட்சிகளுக்கு எதிரான ஒரு தனிக் கட்சியாய் இருக்கவில்லை.

அவர்கள் பாட்டாளி வர்க்கம் அனைத்துக்குமுள்ள நலன்களை அன்னியில் தனிப்பட்ட நலன்கள் எவையும் இல்லாதவர்கள்.

பாட்டாளி வர்க்க இயக்கத்தை வடிவமைக்க அவர்கள் தமக்கெனக் குறுங்குழுக் கோட்பாடுகள் எவற்றையும் வகுத்துக் கொள்ளவில்லை.

ஏனைய தொழிலாளி வர்க்கக் கட்சிகளிடமிருந்து கம்யூனிஸ்டுகளை வேறுபடுத்திக் காட்டுகிறவை பின்வருவன மட்டுமேதான்: 1. வெவ்வேறு நாடுகளிலும் தேச அளவில் பாட்டாளிகள் நடத்தும் போராட்டங்களில் அவர்கள் தேசிய இனம் கடந்து பாட்டாளி வர்க்கம் அனைத்துக்கும் உரித்தான பொது நலன்களைச் சுட்டிக்காட்டி முன்னிலைக்குக் கொண்டு வருகிறார்கள். 2. முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான தொழிலாளி வர்க்கப் போராட்டம் கடந்து செல்ல வேண்டியிருக்கும் வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களிலும் அவர்கள் எப்போதும் எங்கும் இயக்கம் அனைத்துக்குமான நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள்.

ஆகவே நடைமுறையில் கம்யூனிஸ்டுகள் எல்லா நாடுகளிலும் தொழிலாளி வர்க்கக் கட்சிகளது மிகவும் முன்னேறிய, மிகவும் வைராக்கியமான பகுதியாய், ஏனைய எல்லோரையும் முன்னோக்கி உந்தித் தள்ளும் பகுதியாய் இருக்கிறார்கள்; தத்துவார்த்தத்தில் அவர்கள் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் வழிநடப்பையும் நிலைமைகளையும் பொதுவான இறுதி விளைவுகளையும் தெளிவாய்ப் புரிந்து கொள்ளும் அனுகூலத்தை, பாட்டாளி வர்க்கத்தின் பெருந்திரளினருக்கு இல்லாத அனுகூலத்தைப் பெற்றிருக்கிறார்கள்.



கம்யூனிஸ்டுகளுடைய உடனடி நோக்கம் ஏனைய எல்லாப் பாட்டாளி வர்க்கக் கட்சிகளது உடனடி நோக்கம் என்னவோ அதுவேதான்; பாட்டாளிகளை ஒரு வர்க்கமாய் உருப்பெறச் செய்வதும், முதலாளித்துவ மேலாதிக்கத்தை வீழ்த்துவதும், பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரம் வென்று கொள்வதும்தான்.

■ கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை.

# சர்வதேசியம்



அர்ஜென்டினாவில்
பிறந்து,
மெக்சிகோவில்
வாழ்ந்து, கியூபப்
புரட்சியிலும்
ஆட்சியிலும்
பங்கேற்று,
காங்கோவில்
போராளிகளுக்குப்
பயிற்சியளித்து,
பொலிவியாவில்
போராடி மடிந்த சே
குவேரா எந்த
தேசியவாதி?

சர்வதேசியவாதி!

தாய்நாட்டையும் தேசியத் தன்மையையும் இல்லாதொழிக்க விரும்புவதாகவும் கம்யூனிஸ்டுகள் குற்றம் சாட்டப்படுகிறார்கள்.

தொழிலாளர்களுக்குத் தாய்நாடு இல்லை. அவர்களிடம் இல்லாத ஒன்றை அவர்களிடமிருந்து பிடுங்குவது முடியாத காரியம். பாட்டாளி வர்க்கம் யாவற்றுக்கும் முதலாய் அரசியல் மேலாண்மை பெற்றாக வேண்டும், தேசத்தின் தலைமையான வர்க்கமாய் உயர்ந்தாக வேண்டும், தன்னையே தேசமாக்கிக் கொண்டாக வேண்டும். அதுவரை பாட்டாளி வர்க்கம் தேசியத் தன்மை கொண்டதாகவே இருக்கிறது, ஆனால் இச்சொல்லுக்குரிய முதலாளித்துவ அர்த்தத்தில் அல்ல.

முதலாளித்துவ வர்க்கத்தின் வளர்ச்சி, வாணிபச் சுதந்திரம், அனைத்துலகச் சந்தை, பொருளுற்பத்தி முறையிலும் இம்முறைக்கு உரித்தான வாழ்க்கை நிலைமைகளிலும் நாடுகள் ஒருபடித்தானவை ஆதல் — இவற்றின் காரணமாக வெவ்வேறு நாடுகளது மக்களுக்கும் இடையிலுள்ள தேசிய வேறுபாடுகளும் பகைமைகளும் நாள்தோறும் மேலும் மேலும் மறைந்து வருகின்றன.

பாட்டாளி வர்க்க மேலாண்மையானது இவற்றை மேலும் துரிதமாய் மறையச் செய்யும். குறைந்தது தலைமையான நாகரிக நாடுகளின் அளவிலாவது அமைந்த செயல் ஒற்றுமை, பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கு வேண்டிய தலையாய நிபந்தனைகளில் ஒன்றாகும்.

தனியொருவர் பிறர் ஒருவரைச் சுரண்டுதல் எந்த அளவுக்கு ஒழிக்கப்படுகிறதோ, அதே அளவுக்கு ஒரு தேசம் பிறிதொன்றைச் சுரண்டுதலும் ஒழிக்கப்படும். தேசத்தினுள் வர்க்கங்களுக்கிடையிலான பகைநிலை எந்த அளவுக்கு மறைகிறதோ, அதே அளவுக்கு தேசங்களுக்கிடையிலான பகைமையும் இல்லாதொழியும்.

■ கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை.

# காலண்டரின் வரலாறு

**கா**லண்டர் என்றால் நாள், வாரம், மாதம், ஆண்டு என அனைத்து விதமான காலப் பகுப்புகளையும் கணித்துக் கூறும் முறை என்று பொருள்படும்.

உலகில் நூற்றுக்கணக்கான காலண்டர்கள் இருந்தன, இன்றும் இருந்து வருகின்றன.

பல்வேறு கலாச்சாரங்களை சார்ந்த மக்கள், தங்களின் கலாச்சாரத்திற்கும் வானியல் அறிவுக்கும் ஏற்றவாறு தங்களின் காலண்டர்களை உருவாக்கிக் கொண்டனர்.

இவற்றுள் சூரியச் சுழற்சியை அடிப்படையாகக் கொண்ட காலண்டர்கள் அதிகம். சில காலண்டர்கள் சந்திரச் சுழற்சியை அடிப்படையாகக் கொண்டவை. உதாரணமாக இஸ்லாமிய காலண்டர்கள் சந்திரக் காலண்டர்கள் ஆகும்.

ஐரோப்பா உலகின் தலைமைக்கு வந்தபோது ஐரோப்பிய காலண்டரானது உலகில் மிக அதிகமான நாடுகளில் பின்பற்றப்பட்டது. அதில் ஒன்றுதான் ரோமானிய காலண்டர். தொடக்கத்தில் இது பத்து மாதங்களை மட்டுமே கொண்டிருந்தது. ஆண்டுத் தொடக்கமாக மார்ச் மாதத்தைக் கொண்டிருந்தது.

காலந்தோறும் இதில் மாற்றங்கள் ஏற்பட்டன. ஜூலியஸ் சீசர் காலத்தில் இதில் மிகப்பெரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டுத் தொடக்கமாக ஜனவரி ஆனது. 12 மாதங்கள் கொண்டு காலண்டர் அமைந்தது. இக்காலண்டர் ஜூலியன் காலண்டர் என்று பெயர் பெற்றது.

உலக அளவில் இன்று நாம் பயன்படுத்தும் காலண்டர் உண்மையில் ஜூலியஸ் சீசர் திருத்தி வடிவமைத்த காலண்டரே. 12 மாதங்கள், 365 நாட்கள், 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை லீப் ஆண்டு (அதாவது பிப்ரவரி மாதத்தில் 29 நாட்கள்) ஆகிய அனைத்து அம்சங்களுமே கி.மு. 46 ல் சீசரால் அறிமுகம் செய்யப்பட்டு, அடுத்த ஆண்டு முதல் , அதாவது கி.மு. 45 ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டுக்கு வந்து விட்டன.

ஜூலியன் காலண்டர் செயல்பாட்டுக்கு வந்தபோது, இயேசு கிறிஸ்து பிறந்திருக்கவே இல்லை என்பது கருதத்தக்கது. அப்படியானால் ஜூலியன் காலண்டரில் ஆண்டுகளைக் கணக்கிட எந்தக் குறிப்பைப் பயன்படுத்தினர்? அப்போது பயன்படுத்திய ரெபரன்ஸ் பாயின்ட் ரோம் நகரம் உருவான தேதி ஆகும். அதாவது ரோமாபுரி நகரம் நிறுவப்படுவதற்கு முன்னால் (ரோ.மு.) ரோமாபுரி நகரம் நிறுவப்பட்டதற்குப் பின்னால் (ரோ.பி.) என்பதாகும்.

முதலில் கிறிஸ்துவத்தை ஏற்றுக் கொள்ளாமல், இயேசுவைச் சிலுவையில் அறைந்த ரோம சாம்ராஜ்யம் பின்னர் கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் கான்ஸ்டன்டைன் என்ற அரசரின் காலத்தில் கிறிஸ்துவத்தை ஏற்கத் தொடங்கியது.

கி.பி. 525ல் டயோனிசியஸ் எக்சிகஸ் (Dionysius Exigus) என்னும் ரோமானியத் துறவி (இவர் ஒரு கணித நிபுணரும்கூட) முதன்முதலில் கி.மு., கி.பி., என்ற கணக்கிடும் முறையை அறிமுகம் செய்தார். ஆகிலும், கி.பி. 800 ஆம் ஆண்டுகளில்தான் இப்பழக்கம் பரவலானது. இம்முறை கிறிஸ்து சகாப்தம் என்று அழைக்கப்படுகிறது. கி.மு., கி,பி., என்ற சொற்கள் மொத்தக் காலத்தையும் கிறிஸ்து பிறப்பைக் கொண்டு இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றன.

கி.பி. 1582 அக்டோபர் மாதத்தில் போப்பாண்டவர் பதின்மூன்றாம் கிரெகோரி என்பவர் ஜூலியன் காலண்டரில் மேலும் சில திருத்தங்களைச் செய்தார். Centuries (century years) are not leap years unless divisible by 400 என்பது கிரெகோரி மேற்கொண்ட முக்கியமான திருத்தம்.

இந்த ஒரே ஒரு திருத்தத்தை மட்டுமே அவர் செய்தார். இதற்கு முன்பே பெருமளவு திருத்தங்கள் ஜூலியஸ் சீசரால் செய்யப்பட்டுவிட்டன. என்றாலும் கடைசியாகத் திருத்தம் செய்தவர் என்ற அடிப்படையில் இக்காலண்டர் கிரெகோரி காலண்டர் என்று கூறப்படுகிறது. இதையே இன்று உலகம் பின்பற்றி வருகிறது சில திருத்தங்களுடன்.

கிரெகோரி காலண்டரின் ஆண்டு கணக்கிடும் முறை கத்தோலிக்கச் சார்புடையது என்று கூறி பிற மதத்தவர் அதை ஏற்க மறுத்தனர். குறிப்பாக, புரொட்டஸ்டண்டுகள், யூதர்கள், இஸ்லாமியர் ஆகியோர் கிறிஸ்து சகாப்தம் என்ற பெயரை ஏற்கவில்லை. எனவே, மதச்சார்பற்ற ஒரு பெயரை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

எனவே 1980 களில் கிறிஸ்து சகாப்தம் என்ற பெயர் கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக, பொது சகாப்தம் (Common Era) என்ற புதிய பெயர் சூட்டப்பட்டது. வானியல் அறிஞர் ஜோஹன்னஸ் கெப்ளர் 1615 ல் எழுதிய ஒரு புத்தகத்தில் இருந்து பொது சகாப்தம் என்ற சொல் எடுக்கப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து பொது சகாப்தம் நடைமுறைக்கு வந்து விட்டது. இதன்படி, கி.மு., கி,பி., ஆகியவை கைவிடப்பட்டு அவற்றுக்குப் பதிலாக முறையே BCE, CE என்னும் பெயர்கள் சூட்டப்பட்டன. CE = Common Era, BCE = Before Common Era. பொது சகாப்தம், பொது சகாப்தத்திற்கு முன்.

ஆண்டைக் கணக்கிடும் முறை இரண்டிலும் ஒன்றுதான். கிறிஸ்து சகாப்தம் என்ற பெயர் அகற்றப்பட்டு பொது சகாப்தம் என்ற பெயர் நடைமுறைக்கு வந்துள்ளது. மீதி அனைத்தும் கிரெகோரி காலண்டரேதான்.

அடுத்து நேரம். உலகம் முழுவதும் UTC (Universal Coordinated Time) பின்பற்றப்படுகிறது.

மதபீடங்களின் ஆதிக்கத்தில் இருந்த காலண்டர்(காலக் கணக்கு) தற்போது முற்றிலுமாக அறிவியலின் பிடிக்குள் வந்துவிட்டது. அறிவியலின் அதிகாரத்தின்கீழ் காலண்டர் வந்ததும் காலண்டரின் துல்லியம் உறுதிசெய்யப்பட்டது.

1972 ம் ஆண்டு முதல் சிற்சில ஆண்டுகளில் ஒரு வினாடி கூடுதலாகச் சேர்க்கப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டான 2016ல் இவ்வாறு ஒரு வினாடி கூடுதலாகச் சேர்க்கப்பட்டது. அடுத்து எப்போது சேர்க்கப்படும் என்பதை அறிவியல் அறிஞர்கள் வருங்காலங்களில் முடிவு செய்வார்கள்.

பூமி சூரியனைச் சுற்றும்போது சில சமயங்களில் குறைவான வேகத்தில் சுற்றுகிறது. இதனால் சுற்றி முடிக்க அதிக நேரம் (விநாடிகளில்) எடுத்துக் கொள்கிறது. பூமி சுற்றுவதற்கு ஏற்ப நமது கடிகாரத்தைத் திருத்திக் கொள்ள வேண்டும். நமது கடிகாரத்திற்கு ஏற்றவாறு பூமி சுற்றாது. இதனால்தான் லீப் விநாடிகளைச் சேர்க்க வேண்டிய தேவை ஏற்படுகிறது.

இதுதான் காலண்டரின் சுருக்கமான கதை. இதை அனைவரும் அறிந்திட வேண்டும். உலகின் அனைத்து மக்களும் ஏற்கின்ற, மதப் பிரிவுகளைக் கடந்த எல்லோருக்கும் பொதுவான, அறிவியல் வழி அவ்வப்போது திருத்தம் செய்யப்படுகிற ஒரு காலண்டரை இன்று நாம் கொண்டிருக்கிறோம் என்பதில் பெருமை அடைவோம்.

அறிவியலுக்கு மதமில்லை. எனவே, மதச்சார்பற்ற காலண்டராக தற்போது இது மாறிவிட்டது. இது கிறிஸ்து சகாப்தம் அல்ல. பொது சகாப்தம். இது கிரெகோரி காலண்டர் அல்ல, அறிவியல் காலண்டர். இனி கி.மு., கி.பி., என்ற பதங்களைத் தவிர்த்து பொ.மு., பொயு (பொது யுகத்திற்கு முன், பொது யுகம்) என்ற பதங்களைப் பயன்படுத்துவோம்.

அறிவியலுக்கு, மதமில்லை, இனமில்லை, மொழியில்லை. மானுட மேன்மை மட்டுமே உண்டு.

(தோழர் **இளங்கோ பிச்சாண்டி,** நியூட்டன் அறிவியல் மன்றம் அவர்களின் முகநூல் பதிவிலிருந்து தொகுக்கப்பட்டது) ■

<u>நமது நிலை</u>

## மேதைகள் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல

கால இடப் பொருத்தம் எல்லா நூல்களுக்கும், எல்லா மேதமை நிறைந்த ஆளுமைகளுக்கும் கூட தவிர்க்க முடியாதது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குப் பொருத்தமாக இருப்பது பிறிதொரு காலத்தில் பிறிதொரு இடத்திற்குப் பொருத்தமில்லாமல் போகலாம். திருவள்ளுவர் மாமேதைதான். ஆகிலும் திருக்குறளின் பல குறட்பாக்களின் கருத்துக்கள் நம்மால் உடன்பட முடியாதவை. திருக்குறள் அறிவுச் செல்வமாக இருக்கலாம். ஆகிலும் அது விமர்சனத்திற்கு அப்பாற்பட்டது இல்லை.

எந்த ஒரு நூலும், எந்த ஒரு ஆளுமையும், எந்த ஒரு நிறுவனமும் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல.விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதாக எந்த ஒரு கருத்தையும் கருதுவதே அறிவியலுக்குப் புறம்பான குருட்டு நம்பிக்கை. விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவராக எந்த ஒரு ஆளுமையையும் கருதுவதே குருட்டுத்தனமான தனிநபர் வழிபாடு. விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதாக எந்த ஒரு நிறுவனத்தையும் கருதுவதே குருட்டுத்தனமான நிறுவன பக்தி. விமர்சனமற்ற குருட்டுத்தனத்தின் விளைபொருட்களான தனிநபர் வழிபாட்டையும் நிறுவன பக்தியையும் விட்டொழிப்பதே அறிவியல் நடைமுறை.

எந்த ஒரு முழுமையும் பல பகுதிகளைக் கொண்டதுதான். ஒரு சரியான முழுமையின் சில பகுதிகள் தவறாக இருக்கலாம். எந்த ஒரு நூல், ஆளுமை, நிறுவனம் இவற்றின் சரியான பகுதிகளை ஏற்பதும் தவறான பகுதிகளை ஏற்கமறுப்பதும் அறிவியல் வழியாகும்.

ஒரு சரியான முழுமையின் சில தவறான பகுதிகளை விமர்சிப்பதால் நாம் அந்த முழுமைக்கே எதிரானவர்கள் என்பதல்ல. ஒரு தவறான முழுமையின் சில நல்ல பகுதிகளைப் பாராட்டுவதால் நாம் அந்த முழுமையையே ஏற்பவர்கள் என்பதல்ல.

பகுதியும் முழுமையும் என்பது மார்க்சிய ஆய்வு முறையான பொருள்முதல்வாத இயங்கியலின் ஒரு கருத்தினம்.

■

# உடுமலை சங்கர் சாதிஆணவக் கொலை வழக்கின் தீர்ப்பும் மரண தண்டனை எதிர்ப்பும்

*“என் சங்கர் சிந்திய ரத்தத்துக்கு நீதி கிடைக்க ஒன்றே முக்கால் ஆண்டுகள் காத்திருந்தேன். அந்த வகையில் இன்று வழங்கப்பட்ட தீர்ப்பை வரவேற்கிறேன். சங்கர் கொலைக்கு இது மட்டுமே நீதியாகாது. சாதி ஆணவக் கொலைகளுக்கு தனிச் சட்டம் கொண்டு வரப்படுவதே இது போன்ற ஆணவக் கொலைகளைத் தடுக்கும். அதுவே சங்கர் கொலைக்கு சரியான நீதியாக இருக்கும்.”*

**தோழர் கவுசல்யா**



பயங்கரவாதம் எப்படி அரசு பயங்கரவாதம், அமைப்பு பயங்கரவாதம், தனிநபர் பயங்கரவாதம் என்று வகைப்படுத்தப் படுகிறதோ அதுபோலவே நீதி வழங்குதலும் மேலே குறிப்பிட்ட இந்த மூன்று வகைமைகளிலும் அடங்கும். அரச நீதி, அமைப்பு நீதி, தனிநபர் நீதி என மூன்றுமே நடைமுறையில் இருக்கின்றன. வழங்கப்படுகின்ற தீர்ப்பு எதை நோக்கமாகக் கொண்டு இருக்கிறது என்பதும், யாருடைய அல்லது எவர்களுடைய நலன்களைப் பிரதிபலிக்கின்றது என்பதைப் பொருத்தும் யாரால் எந்த கோட்பாடுகளின் அல்லது சட்டத்தின் அடிப்படையில் வழங்கப்படுகிறது என்பதைப் பொருத்தும் அந்தத் தீர்ப்பின் சரித்தன்மை, ஏற்புடைமை மற்றும் சார்புத் தன்மை போன்றவற்றை ஊகிக்கலாம்.

அரசு என்பது ஒரு வர்க்க சார்பான ஒடுக்குமுறைக் கருவி என்பதால் அது தனக்கான சட்டங்களின் வழியாக குற்றங்களை முடிவு செய்கிறது, தீர்ப்புகளை வழங்குகிறது. சுரண்டும் வர்க்கங்களின் அரசுகளின் சட்டங்கள் தங்களின் உண்மையான நோக்கங்களை, தங்களின் சார்புத் தன்மையை மூடி மறைப்பதற்காக பொதுவான சமூக நலன்களை அடிப்படையாகக் கொண்ட சில சட்டங்களைக் கொண்டிருப்பதோடு மிகக் குறைவான தருணங்களில் அவற்றின் அடிப்படையில் ஒப்பீட்டளவில் ஏற்புடைய அல்லது நல்ல தீர்ப்பை வழங்குகின்றன. அப்படியான தீர்ப்புகள் வரும்போது அரசையும் அரசின் வர்க்க சார்பையும் நீதிமன்றம் அரச ஒடுக்குமுறைக் கருவிகளில் ஒன்று என்பதையும் மறந்து நீதிமன்றங்களையும், நீதியரசர்களையும், அரச நீதியையும் ஆகா ஓகோ என்று புகழ்ந்து பூரிப்பது அறியாமையே. கவுசல்யா வழக்கில் ஒப்பீட்டளவில் நல்ல தீர்ப்பை கீழமை நீதிமன்றம் வழங்கியிருக்கிறது. மேல் முறையீட்டில் தீர்ப்பு மாறலாம்.

இனி மரண தண்டனை எதிர்ப்பு என்ற முழக்கம் குறித்து சிந்திப்போம். வர்க்க சமுதாயத்தில் சார்பற்ற, நடுநிலையான சுதந்திரம், சமாதானம், ஜனநாயகம், சர்வாதிகாரம் என்று எதுவுமே இருக்க முடியாது. இதுகுறித்த ஒரு சிறு பதிவை நாம் நிகரன் 19வது இதழில் முன்பே வெளியிட்டிருக்கிறோம். அதுபோலவே மரண தண்டனை எதிர்ப்பு என்பதை சார்பற்றதாக, நடுநிலையானதாக, பொதுவானதாக முன்வைப்பது என்பது ஒரு மோசடியே.

கவுசல்யா சங்கர் வழக்கு விடயத்தில் கவுசல்யாவின் சாதி மறுப்புத் திருமணத்தை தனது நீதியின்படி குற்றம் என்று முடிவுசெய்து அதற்கு மரண தண்டனை வழங்கினார் கவுசல்யாவின் தந்தை சின்னச்சாமி. இது தனிநபர் நீதி.

கவுசல்யாவின் தந்தை சின்னச்சாமியின் இந்த சாதி வெறியை அடிப்படையாகக் கொண்ட, கவுசல்யாவின் தனி மனித உரிமைக்கு எதிரான சமூக விரோத செயலை தங்களது நீதியின்படி சில அமைப்புகள் குற்றம் என்றும் வேறு சில அமைப்புகள் குற்றமில்லை என்றும் தீர்க்கின்றன. குற்றம் என்று தீர்க்கும் அமைப்புகளில் சில இதற்கு மரண தண்டனை வழங்குவது தவறில்லை என்றும் வேறு சிலரோ மரண தண்டனை தீர்வாகாது என்றும் வாதிடுகின்றனர்.

எல்லாக் கொலைகளும் ஒரு வகையில் மரண தண்டனைதான். அது தனிநபரால் வழங்கப்படுகிறதா, அமைப்புகளால் வழங்கப்படுகிறதா, அரசால் வழங்கப்படுகிறதா என்பதைப் பொறுத்தே அது வேறுபடுகிறது. அது போல எந்த நோக்கத்திற்காக எந்தக் கொள்கைகளின் அடிப்படையில் வழங்கப்படுகிறது என்பதைப் பொருத்தும் வேறுபடுகிறது.

பொதுவான மரண தண்டனை எதிர்ப்பு முழக்கத்தை ஆதரிக்கிறவர்கள் எல்லாவிதமான கொலைகளையும் வன்முறையையும் எதிர்க்கும் அகிம்சாவாதிகளாகவே இருக்க முடியும். அகிம்சாவாதியான காந்திகூட இப்படி ஒரு நிலையை தனது கொள்கையில் வைத்திருக்கவில்லை. மேலும் வர்க்க சமுதாயத்தில், வர்க்க போராட்டம் ஆளும் வர்க்கங்களால் வன்முறையினாலும் கொலைத் தண்டனைகளாலும் ஒடுக்கப்படும்போது அதற்கு எதிரான சுரண்டப்படும் வர்க்கங்களின் வன்முறை என்பது யதார்த்தமான ஒன்று. தவிர்க்க முடியாதது. 'பாசிபிசம்' அல்லது அமைதிவாதம் என்பது மார்க்சீயம் அல்ல.

சோஷலிச மையம் என்று பெயர் வைத்துக்கொண்டு இரா மருதுபாண்டியன் அமைதி வாதம் பேசுவது முரண்பாடில்லையா? செல்வி மனோ, தங்கம் பாண்டியன் போன்ற தோழர்கள் பொதுவான மரண தண்டனை ஒழிப்பு என்ற முழக்கத்தை முன்னிறுத்துவது மோசடி இல்லையா? புலிகள் இயக்கத்தின் அமைப்பு அளிக்கும் மரண தண்டனையை சரி என்று சொல்லும் தமிழ் ஈழ ஆதரவாளர்கள் பொதுவான மரண தண்டனை ஒழிப்பு முழக்கத்தின் பின்னால் அணிவகுப்பது ஏமாற்று இல்லையா? அரசியல் மற்றும் சமூக விடுதலைப் போராளிகளையும் சமூக விரோதிகளையும் ஒன்றுபோல பார்ப்பது எப்படி?

நேர்மையான இயக்கங்கள் எந்தக் குறிப்பிட்ட கொலைத் தண்டனையையும் அதன் நோக்கம் மற்றும் அது வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படை இவற்றிலிருந்தே எதிர்க்கவும் ஆதரிக்கவும் வேண்டும். வர்க்க சமுதாயத்தில் மரண தண்டனை ஒழிப்பு

சாத்தியமற்றது. குறிப்பிட்ட ஒரு வழக்கு மற்றும் அதன் மீதான தீர்ப்பு, தண்டனையைப் பொறுத்துதான் அதன் மீதான நமது ஏற்பும் எதிர்ப்பும் இருக்க முடியும்.

ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் கல்வி நிதியத்தின் கணக்கின்படி ஒவ்வொரு நாளும் வறுமையின் காரணமாக இருபத்தி இரண்டாயிரம் குழந்தைகள் சாகிறார்கள்.

இந்தியாவில் மட்டும் நூற்றுக்கு இருபத்து ஏழு மரணங்கள் சரியான மருத்துவ வசதி பெற இயலாமையால் நடக்கின்றன. முழு உலகிலும் ஆண்டுக்கு மூன்றரைக் கோடிப்பேர் சரியான மருத்துவ வசதி பெற முடியாமல் சாகிறார்கள்.

வேலையின்மையின் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் உலகில் நாற்பத்து ஐயாயிரம் தற்கொலைகள் நடைபெறுகின்றன.

ஏகாதிபத்திய சந்தை பிடிக்கும் யுத்தங்களினால், முதலாம் உலக யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள் ஏறத்தாழ மூன்றரை கோடிப் பேர்.

இரண்டாம் உலக யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள் மொத்தம் ஏறத்தாழ எட்டு கோடிப் பேர்.

ஜப்பானில் வீசப்பட்ட அணு குண்டுகளினால் கொல்லப்பட்டவர்கள் மட்டும் இரண்டு லட்சத்திற்கும் அதிகம்.

அதன் பிறகும் வியட்நாமில், கொரியாவில், கியூபாவில், லத்தீன் அமெரிக்க நாடுகளில், ஆப்பிரிக்க கண்டத்தில் ஏகாதிபத்திய நாய்கள் வேட்டையாடிய மனித உயிர்கள் எண்ணி முடியாது.

இது தவிர மதவெறி, நிறவெறி, இனவெறி, சாதி வெறியால் ஒவ்வொரு நாளும் கொல்லப்படும் மனித உயிர்கள் ஆயிரம் ஆயிரம்.

சுரண்டும் வர்க்கங்களின் ஆதரவாளர்களான அறிவாளிகளின் மனித உயிர்களின் மீதான பாசம் என்பது வெறும் வேஷம். இவர்களுக்கு மாடுகளின் மீதும் நாய்களின் மீதும் இருக்கும் அக்கறை கூட மனித உயிர்களின் மீது கிடையாது.

கொடூரமான சமூக விரோதிகள் மற்றும் சாதிவெறி பிடித்த கொலைகார மிருகங்களின் மரணத்திற்காக பரிதாபப்படும் பிற்போக்குவாதிகள் மரண தண்டனை ஒழிப்பு முகமூடிக்குள் ஒழிந்து கொள்கிறார்கள். அரசியல் போராளிகளையும் சமூக விரோதிகளையும் ஒரே தட்டில் வைத்து ஒன்று போலப் பார்க்கிறார்கள்.

■

## கட்சி நிறுவனக் கோட்பாடுகள்

*நூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட ஒப்பீட்டளவில் சிறந்த கட்சி நிறுவனக் கோட்பாடுகள் தற்காலத்தில் அவசியம். சோவியத் மற்றும் கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் கட்சிகளின் அமைப்புக் கோட்பாடுகள் அந்தக் கட்சிகள் முதலாளியப் பாதைக்குத் திரும்புவதைத் தடுக்க முடியவில்லை என்பது நிரூபணம் ஆகியுள்ளது.*

# வர்க்கப் போரே மார்க்சியம்

மனிதர்கள் பிறப்பின் அடிப்படையிலும், வாழும் இடத்தின் அடிப்படையிலும், ஏற்றுக்கொண்ட கொள்கைகளின் அடிப்படையிலும், பொருள் உற்பத்தி உறவுகளின் அடிப்படையிலும் வெவ்வேறு அடையாளங்களை சுமந்து கொண்டோ அல்லது சுமத்தப் பட்டோ இருக்கிறார்கள்.

பிறப்பின் அடிப்படையில் பாலினம், நிறம், சாதி, மரபினம், மொழியினம் ஆகிய அடையாளங்களும்; வாழும் இடத்தின் அடிப்படையில் தேசிய, பிரதேச, நில வகை சார்ந்த அடையாளங்களும்; ஏற்றுக் கொண்ட கொள்கைகள் என்பதில் பல்வேறு மதங்கள், ஆன்மீகக் குழுக்கள், அரசியல் குழுக்கள் சார்ந்த அடையாளங்களும்; உற்பத்தி உறவுகளின் அடிப்படையில் வர்க்க அடையாளங்களும் இந்தியத் துணைக்கண்டத்து மக்களிடம் காணப்படுகின்றன.

இவைகளில் உற்பத்தி உறவுகளின் அடிப்படையில் அமைந்த வர்க்க அடையாளங்கள் தவிர்த்த பிற அடையாளங்கள் எல்லாம் வர்க்க வேறுபாடுகளை மறைக்கவே உதவுகின்றன. எடுத்துக்காட்டாக, தமிழர் என்ற அடையாளம் தமிழராயிருக்கிற முதலாளிக்கும், தொழிலாளிக்கும், விவசாயிக்கும், வணிகருக்கும் பொதுவான ஒன்றாக இருக்கிறது. இது வர்க்க அடிப்படையில் அமையாத பிற எல்லா அடையாளங்களுக்கும் பொருந்தும்.

வர்க்க அடிப்படையில் மனிதர்களை அடையாளப்படுத்துவதையும், வர்க்க அடையாளங்களின் அடிப்படையில் மனிதர்களின் நலன்களை வேறுபடுத்திப் பார்ப்பதையும், சுரண்டும் வர்க்கங்களுக்கு எதிராக சுரண்டப்படும் வர்க்கங்களின் நலன்களைக் குறிப்பாக முன்னிறுத்திச் செயல்படுவதுமே கம்யூனிசம்.

வர்க்கமல்லாத பிற அடையாளங்களின் அடிப்படையில் சமூகத்தில் நிலவும் ஒடுக்குமுறைகள், அசமத்துவங்கள், அநீதிகளுக்கு எதிராகப் போராடும் அதே வேளையில் பாட்டாளி வர்க்க நலன்களை முதன்மைப்படுத்தி அணிதிரள்வதும், அமைப்பாதலுமே கம்யூனிஸ்டு என்று அழைத்துக்கொள்ளத் தகுதியானதாகும்.

உழைக்கும் மக்களைப் பிரித்து அதில் ஒரு பகுதியை தங்களின் கையாட்களாக வைத்துக்கொள்ளவே சுரண்டும் வர்க்கங்கள் அடையாள அரசியலை ஆதரிக்கும்.

■

"மனித குலத்தின் நன்மைக்காகச் சிறப்பாகப் பாடுபடுவதற்குரிய வேலையை நாம் தேர்ந்தெடுத்துவிட்டால், அதன் சுமை நம்மை அழுத்த முடியாது. ஏனென்றால், அது எல்லோருடைய நன்மைக்காகச் செய்யப்படுகின்ற தியாகம். எவனொருவன் பெரும்பாலோர்க்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணுகிறானோ அவன்தான் அதிகமான சந்தோஷத்தை அடைகிறான் என்று உலக அனுபவம் கூறுகிறது."

**■ காரல் மார்க்ஸ்**

# மார்க்சிய அறிவும் உழைக்கும் மக்கள் நலனும்

அதிக அளவில் மார்க்சிய நூல்களைப் படித்து அவை குறித்து அதிக அறிவைப் பெற்றிருப்பதால் மட்டுமே ஒருவர் சிறந்த கம்யூனிஸ்ட் ஆகிவிட முடியாது. அந்த அறிவை எந்த அளவிற்கு அவர் தனது நடைமுறையில் உழைக்கும் மக்களின் நலன்களுக்காகப் பயன்படுத்த முயற்சிக்கிறார் என்பதைப் பொறுத்தே அவர் ஒரு சிறந்த வர்க்கப் போராளியாக வளர்ச்சி அடைய முடியும். எனவே, உழைக்கும் மக்களின் நலன்களை முன்னிறுத்தி வாழ்வது என்ற லட்சியமும், அதன் மீது தணியாத தாகமும் கொண்டிருப்பது மட்டுமல்லாமல், அந்த இலட்சியத்தை விட்டு விலகாமல் இருப்பதற்கான இடைவிடாத தொடர்ச்சியான போராட்டத்தை சொந்த வாழ்வில் ஒரு புரட்சியாளர் நடத்த வேண்டும். இப்படியான ஒரு வாழ்வு அவருக்கு அவரது இலட்சியத்தை அடைவதற்கான போராட்டத்திற்கு தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதை அவசியமாக்குகிறது. அவர் அதைத் தனது சுய முயற்சிகளின் மூலம் பெற்றுக் கொள்வார். அறிவானது கல்வி, கேள்வி மற்றும் நடைமுறை அனுபவங்களால் பெறப்படுகிறது. உழைக்கும் மக்களை சுரண்டலில் இருந்து விடுதலை பெறச் செய்வதை நோக்கமாகக் கொண்டிராத வெறும் மார்க்சிய அறிவு குறித்து நாம் வாயைப் பிளக்க வேண்டியதில்லை. உழைக்கும் வர்க்க எதிரிகளான சுரண்டும் வர்க்கங்களின் கூலி அடிமைகளான அறிவு ஜீவிப் பண்டிதர்களிடமும், பிழைப்புக்காக பொருளாதார, அரசியல், தத்துவ ஆசிரியர்களாக இருக்கும் முதலாளித்துவ சார்பு கல்வியாளர்களிடமும் கூட அத்தகைய அறிவு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அந்த அறிவு உழைக்கும் மக்களின் விடுதலைக்கு பயன்படாததாக, எதிரிகளுக்கு உதவுவதாக இருக்கிறது. சோவியத் யூனியன் உடைவுக்குப் பின்னர் அதன் வரலாற்றில் இருந்து படிப்பினைகள் பெற்றுக்கொள்வது என்ற அடிப்படையில் அதனை முன்வைத்து ஆய்வுகள் செய்வதாகவும் அதன் மீது தாங்கள் வந்தடைந்திருக்கும் புதிய முடிவுகளைப் பலரும் வெளியிட்டு வருகின்றனர். பின் சோவியத் நிலைமைகளை ஆய்வு செய்வதிலும் இரு வேறு வர்க்க நலன்களை வெளிப்படுத்துவதாகவே இந்த முடிவுகள், கண்டடைதல்கள் இருப்பதை கண்டுகொள்ள ஒரு மார்க்சீயவாதி தவறமுடியாது. உழைக்கும் வர்க்க நலன்களில் இருந்து ஆய்வு செய்கிறவர்கள் எட்டும் முடிவுகளிலும் பார்க்க சுரண்டும் வர்க்க ஆதரவாளர்கள் வந்தடைந்திருக்கும் முடிவுகள் வேறு விதமானதாக இருப்பதை நாம் உணர முடிகிறது. முதலாளிய ஏகாதிபத்திய ஆதரவாளர்கள் மார்க்சியம் தவறு, லெனினியம் தவறு, வர்க்கப் போராட்டம் தவறு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தவறு என்பது போன்ற கருத்துக்களை விஷமத்தனமாக விதைக்கிறார்கள். இவர்களை அம்பலப்படுத்துவதும் உழைக்கும் மக்களின் நலன்களில் இருந்து மார்க்சீயத்தின் அடிப்படைகளை விட்டு ஒருவர் விலகிச் செல்லாமல் இருப்பதை உத்தரவாதப் படுத்துவதும் ஒவ்வொரு உண்மையான மார்க்சீயவாதியின் அல்லது விஞ்ஞான சோஷலிச வாதியின் கடமை ஆகிறது. பாட்டாளி வர்க்க நலன்களுக்கு எதிரான கருத்தை பரப்புகிற பலரும் இன்று மார்க்சீய முகமூடிக்குள் ஒளிந்து கொண்டே அதைச் செய்து வருகிறார்கள் என்பது மேலும் மேலும் அம்பலமாகிவருகிறது.

■

# உழைக்கும் மக்களின் தாகம் ஓருலக சோசலிசத் தாயகம்

வெறுமனே சோசலிசம் எனது குறிக்கோள் என்று முழங்குவது மட்டும் போதுமானதல்ல. கடைந்தெடுத்த பாசிச சர்வாதிகாரியான ஜெர்மனியின் ஹிட்லர் கூட தனது கட்சிக்கு 'தேசிய சோசலிசக் கட்சி' என்றுதான் பெயர் வைத்திருந்தார். உண்மையில் மார்க்ஸ் எங்கெல்ஸ் இவர்களால் வடிவமைக்கப்பட்ட விஞ்ஞான சோசலிசத்திற்கு தேசியம் என்பது ஏற்புடையதல்ல. அது சர்வ தேசியத்தையே வலியுறுத்தியது. கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை 'தொழிலாளர்களுக்கு தாய் நாடு இல்லை' என்று சொல்லியது. 'அனைத்து நாடுகளின் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்' என்று முழங்கியது. தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்கான போராட்டம் வடிவத்தில் தேசிய எல்லைகளுக்குள் நடைபெற்றாலும் அது உள்ளடக்கத்தில் தேசியப் போராட்டம் அல்ல என்று சுட்டிக் காட்டியது.

ஏகாதிபத்திய அடிமைத்தனத்திலிருந்து ஒரு காலனி தேசம் விடுதலை பெறுவது என்பது ஏகாதிபத்தியத்தை பலவீனப்படுத்துவதற்கும், குறிப்பிட்ட ஏகாதிபத்திய தேசத்தில் புரட்சிக்கான புறச் சூழலை சாதகமான முறையில் வளர்த்துச் செல்லவும் உதவும். அதே நேரத்தில் விடுதலைக்காகப் போராடும் காலனி தேசத்தில் அதிகாரம் சுரண்டும் வர்க்கத்தின் கைகளுக்குச் சென்று விடாமல் பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் ஆட்சி வந்து சேர்வது என்பது ஆகக் கூடுதலான முக்கியத்துவம் உடையது. ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான தேச விடுதலைப் போராட்டங்களை பாட்டாளி வர்க்கம் அதிகாரம் வென்று கொள்வதற்கான வழியாகப் பயன்படுத்தலாமே ஒழிய அதில் தேசியவாத மயக்கங்களுக்கு எந்த இடமும் இருக்க முடியாது.

தனி ஒரு நாட்டில் தொழிலாளி வர்க்க கட்சி ஆட்சி அதிகாரத்தை வென்று கொள்வது என்பது குறுகிய தேசிய நலன்களோடு முடிந்து விடுமானால் அது போன்ற வெட்கக் கேடான மார்க்சிய விரோத வேலைத்திட்டம் வேறு எதுவும் இருக்க முடியாது. ஒரு நாட்டில் அதிகாரத்தை வென்று கொள்வதற்குப் பிறகு உலகின் பிற நாடுகளுக்கு அதை விரிவுபடுத்துவதற்கான செயல் திட்டம் இல்லாத ஒரு கம்யூனிஸ்ட் கட்சி வெறும் தேசியவாதச் சீரழிவிற்கு உள்ளான தொழிலாளர் விரோத, மார்க்சீய விரோத கட்சியே. உலகின் எந்த ஒரு மூலையிலும் இருந்து சுரண்டும் வர்க்க ஆட்சி அதிகாரம் என்பது ஒட்டுமொத்தமாகத் துடைத்து எறியப் படும் வரை தனது சொந்த தேசத்தில் மட்டும் தொழிலாளி வர்க்க ஆட்சியைப் பாதுகாத்து நீடிக்கச் செய்வது சாத்தியம் அற்றது.

முன்னாள் சோவியத் யூனியன் உள்ளிட்ட கம்யூனிஸ்ட் கட்சிகள் அரசதிகாரம் வென்று கொண்ட பல நாடுகளிலும் அந்த கட்சிகளின் தவறான மார்க்சீய விரோத தேசியவாத நடைமுறையே இன்று உலகில் தொழிலாளர் வர்க்க இயக்கத்திற்குப் பெரும் பின்னடைவைக் கொண்டுவந்திருக்கிறது. தொடக்கத்தில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி ஓரளவிற்கு தனது சர்வதேசியக் கடமைகளை கவனத்தில் கொண்டிருந்தது என்பது உண்மைதான். அதுவே சீனாவில் புரட்சியை நடத்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு பெரும் உதவியாயிருந்து.

ஆகிலும் பின்னர் இந்த நடைமுறை படிப்படியாக மாறி தனது ஏகாதிபத்திய நலன்களுக்கு மட்டும் உதவும் வெளிநாட்டுக் கொள்கையாக உருமாறியது. தனி ஒரு நாட்டு கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி ஒட்டுமொத்த உலகின் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களையும் ஒடுக்கப்படும் மக்கள் குழுக்களின் நலன்களையும் முன் நிறுத்தாத, தனி ஒரு நாட்டின் அரசு முதலாளித்துவமாகவும், சமூக ஏகாதிபத்தியமாகவும் மாறியது.

தனக்கென எந்தத் தாய் நாடும் இல்லாத தொழிலாளி வர்க்கம் ஒரே சோசலிசத் தாய்நாட்டை உருவாக்கிக் கொள்ள தடையாக இருந்ததும், இருப்பதும் இந்த மார்க்சீய விரோத தேசிய வாதமே. வெவ்வேறு நாடுகளில் அதிகாரத்தில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் தங்களுக்குள் பகைமை கொண்டு மாறி மாறி உலக ஏகாதிபத்தியத்திற்கு உதவியதற்கும் அடிப்படையாக இருந்தது இந்த தொழிலாளி வர்க்க விரோத தேசிய வாதமே. இறுதியில் சோஷலிச நாடுகள் என்ற பெயரில் இருந்த நாடுகளான சீனாவும் வியத்நாமும் தங்களுக்குள் யுத்தம் செய்யும் அளவிற்கு கொண்டு சென்றது இந்த தேசியவாதமே.

ஒரு நாட்டில் அதிகாரம் வென்று கொண்ட கம்யூனிஸ்ட் கட்சி பிற நாடுகளில் சுரண்டப்படும் ஒடுக்கப்படும் மக்களுடன்தான் உண்மையில் உறவு வைத்துக் கொள்ள முடியுமே ஒழிய அந்த நாடுகளின் சுரண்டும் வர்க்க அரசுகளுடன் அல்ல. சர்வதேசியத்தை மறந்த இந்த சீரழிந்த தேசிய வாதக் கட்சிகள் என்னதான் கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் இருந்தாலும் பிற நாடுகளின் சுரண்டும் வர்க்க அரசுகளுடன் உறவு வைத்து அந்த நாட்டு உழைக்கும் மக்களின் போராட்டத்திற்கு துரோகம் இழைத்தன. ஒடுக்கும் அரசுகளின் படைகளுக்கு ஆயுத உதவிகளும், போர்ப்பயிற்சிகளும் அளித்தன. பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தைக் கைவிட்டுவிட்ட எந்த ஒரு கட்சியும் உண்மையில் கம்யூனிஸ்ட் கட்சி இல்லை. மார்க்சியம் லெனினியம் என்று பெயர் சூட்டிக் கொள்வதற்கு இவர்களுக்கு எந்த அருகதையும் இல்லை.

உலக நாடுகளில் அதிகாரத்திற்கு வந்த கம்யூனிஸ்ட் கட்சிகளின் தேசியவாதச் சீரழிவே உலகில் சோசலிசத்தின் பின்னடைவிற்கு மூல முதற் காரணம். கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆட்சியில் உள்ள நாடுகள் ஒரே அரசாக ஒன்றிணைய வேண்டும். ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகள் சிதைந்து போவதும், கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆளும் நாடுகள் ஒன்றிணைவதும் அவசியம். சோஷலிச உலக ஒற்றுமையைக் குலைத்தது தேசியவாதச் சீரழிவே..

கம்யூனிச இயக்கங்களில் வளரும் தேசிய வாதக் களையை வேரறுப்போம். ஒழிக தேசியவாதம். வெல்க சர்வதேசியம். தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்போம். இனவாதம், தேசியவாதம் எதிர்ப்போம். உழைக்கும் மக்களின் தாகம் ஒருலக சோசலிசத் தாயகம். ■

**ஒரு காலத்தில் புரட்சிக்கு சாதகமாக இருக்கும் தனி நபர்கள் பிற்காலத்தில் அவ்வாறு இல்லாமல் போகக்கூடும் என்பதை வரலாறு காட்டுகிறது.**

**சிறந்த கம்யூனிஸ்ட் ஆவது எப்படி என்று சொல்லிக் கொடுத்த லியூ சா கி / லியூ சாவோ ஷி பிற்காலத்தில் சிறந்த கம்யூனிஸ்ட் ஆகாமல் போகலாம்.**

# சுய நிர்ணய உரிமை

*சுய நிர்ணய உரிமை ஒவ்வொரு தனிப்பட்ட தேசிய இனத்தின் அடிப்படை உரிமை ஆகும். தேசிய இனங்கள் தங்கள் தன்னுரிமைக்காகப் போராடுவதும் பிறிதொரு அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட தேசிய இனங்களுடன் சேர்ந்திருப்பதில் இருந்து பிரிந்து செல்லும் உரிமை பெற்று இருப்பதும் அவசியமானது.*

*சேர்ந்திருப்பதையும் பிரிந்து செல்வதையும் அந்த குறிப்பிட்ட தேசிய இனத்தின் மக்களே முடிவு செய்ய வேண்டும்.*

*பலவந்தமாக ஒரு தேசிய இன மக்களை இன்னொரு தேசிய இனத்துடன் இணைத்துக் கொண்டிருப்பது ஏற்புடையதல்ல. பலவந்தமாகப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கவில்லை என்பதை ஒரு அரசு அந்த தேசிய இன மக்களுக்கு சுய நிர்ணய உரிமை அளிப்பதன் மூலமே உறுதிப்படுத்த வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலம் அத்தகைய உரிமையை வழங்காத எந்த ஒரு அரசும் பலவந்தமாக ஒரு தேசிய இன மக்களைத் தனது கட்டமைப்பிற்குள் இணைத்துக் கொண்டிருப்பதாகவே பொருள்.*

*ஏகாதிபத்திய தேசங்களிடமிருந்து விடுதலை கோரும் தேசங்கள் அவர்கள் விருப்பத்தின் அடிப்படையில் தனி நாடாகவோ அல்லது வேறு ஒரு நாட்டுடன் சேர்ந்து கொள்ளவோ முடியும். இதை அந்த தேசிய இன மக்களே முடிவு செய்வார்கள்.*

*ஒரு மார்க்சீயவாதி என்ற முறையில் நாம் விரும்புவது தனி நாடாக இருப்பதைப் பார்க்கிலும் முன்பே உருவாகி நிலைபெற்று இருக்கும் ஒரு சோஷலிச அரசுடன் சேர்ந்து கொள்வது அல்லது சோஷலிச அரசியல் அமைப்பை ஏற்கும் பிற தேசங்களுடன் சேர்ந்து ஒரு பெரிய அரசை நிறுவுவது என்பதே. அதுவே சர்வ தேச உழைக்கும் மக்களின் நலன்களுக்கு ஏற்றது.*

*குறுகிய தேசிய வாதத்தால் நச்சுப் படுத்தப் படாத பாட்டாளி வர்க்க சர்வ தேசியமே தேசிய இனப் பிரச்சினையில் ஒரு மார்க்சிய லெனினியவாதியின் வழியாக இருக்க முடியும்.*

*குறுகிய தேசிய வெறி அல்லது சமூக தேசிய வெறி என்பது தோழர் லெனின் எதிர்த்துப் போராடிய திருத்தல்வாத, சந்தர்ப்பவாதப் போக்குகளில் ஒன்று.*
■

## மாலினோவ்ஸ்கி

*புரட்சிக்கு முந்திய போல்ஷவிக் கட்சியின் அனுபவங்களில் இதுவும் ஒன்று: 1912ஆம் ஆண்டில் அரசாங்க உளவாளியான மாலினோவ்ஸ்கி, போல்ஷவிக் மத்தியக் குழுவில் நுழைந்து கொண்டான். அவன், மிகச் சிறந்த, மிக விசுவாசமான தோழர்கள் ஏராளமான பேரைக் காட்டிக் கொடுத்தான். அவர்கள் கடும் சிறைத் தண்டனை விதிக்கப் படுவதற்குக் காரணமாக இருந்தான், அவர்களில் பலரது சாவை விரைவு படுத்தினான்.*







இந்த சிறுநூல்களை இலவசமாக www.nikaran.com என்ற எமது வலைத்தளத்தில் Nikaran Books என்ற பக்கத்தில் வாசிக்கலாம் மற்றும் தரவிறக்கிக்கொள்ளலாம்.

<u>*அடிப்படை மார்க்சியம்*</u>

## பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம்

வர்க்கப் போராட்டத்தை மட்டும் ஏற்பவர்கள் மார்க்சியவாதிகள் ஆகிவிட மாட்டார்கள்... வர்க்கப் போராட்டத்தை ஏற்பதை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்பது வரை விரித்துச் செல்பவனே மார்க்சியவாதியாவான். மார்க்சியவாதிக்கும் சாதாரண சிறு (அதே போல பெரு) முதலாளிக்கும் இடையே உள்ள மிகவும் ஆழமான வேறுபாடாக இதுவே அமைகிறது. மார்க்சியம் பற்றிய உண்மையான புரிதலையும் அதை ஏற்றுக் கொள்வதையும் சோதித்து அறிவதற்கான உரைகல்லும் இதுதான்.

**தோழர் லெனின்.**

தொடர்பு முகவரி:
ஆசிரியர், நிகரன், 3/806, எம்.ஜி.ஆர்.நகர், ஆலங்குளம் - 626127.
வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு.
பேச: 9486648145 இ-மெயில்: nikarantamil@yahoo.com